பக்கங்கள்: 20

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 03 ஞாயிற்றுக்கிழமை 18.12.2022 கதிர் 43

### இது ரகசியம் அல்ல!

கொழும்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் படுகொலை சம்பவம் தொடர்பில் புதிய தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

அவருக்கும் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் 2

# வடக்குக் கடலில் தத்தளித்த படகு 130 மியன்மார் அகதிகளுடன் மீட்பு

**மியன்மார் நாட்டை சேர்ந்த ரோகிங்கியர்கள் எனக் கருதப்படும் சுமார் 130 பேர் வரையில் பயணித்த படகு ஒன்று வட இலங்கைக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த போது இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளது. அவர்கள் மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படை தளத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என்று இன்று விடிகாலை வெளியான செய்திகள் தெரிவித்தன.** 2

### ‘ஷொக்’ அடிக்கும் செய்தி!

## ஜனவரியில் மின் கட்டணம் எழுபது வீதத்தால் எகிறும்?

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மின்கட்டணத்தை 70 சதவீதமாக அதிகரிக்க இலங்கை மின்சார சபை அவதானம் செலுத்தியுள்ளது.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக நிச்சயம் நீதிமன்றத்தை நாடுவோம் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 19

## தெஹிவளையில் ரயிலுடன் மோதி இருவர் உயிரிழப்பு!

ரயில் பாதையில் படம் எடுக்கச் சென்ற மூவர் துரதிஷ்டவசமாக ரயிலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 22 வயதுடைய ஆணும், அதே வயதுடைய பெண்ணும் உயிரிழந்துள்ளனர். மற்றவர் படுகாயமடைந்துள்ளார்.

தெஹிவளை மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்காக மாத்தறையில் இருந்து வந்தவர்களில் மூவர் தெஹிவளை ரயில் பாதையில் வைத்து 19

## எதிர்க்கட்சிகள் இணைந்து பரந்துபட்ட கூட்டணியாம்!

### வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணியை நாட்டு மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆகையால் பிரதான எதிர்க்கட்சிகளுடன் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்பதற்கான 19

## அட்மிரல் பதவி நிலை உயர்வுடன் கடற்படைத் தளபதி இன்று ஓய்வு

இன்று ஓய்வு பெறும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிூந்த உலுகெதென்னவுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இன்று முதல் அட்மிரல் தரத்திற்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. 19



## பிரிபடாத நாட்டுக்குள் நிரந்தர தீர்வை எட்டுவதற்கு எங்களுக்கு உதவுங்கள்!

### எரிக் சொல்ஹெய்மிடம் மனோ கணேசன் கோரிக்கை



‘உங்கள் அனுபவத்தை பயன்படுத்த இதுதான் வேளை. நல்ல தருணம். பிரிபடாத இலங்கைக்குள் நிரந்தர தீர்வை அடைய எமக்கு உதவுங்கள்’ - என இலங்கை வந்துள்ள எரிக் சொல்ஹெய்மிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணே சனை, இலங்கை வந்துள்ள 2

## மாணவருக்குப் போதைவஸ்துகள் விற்ற 75 சந்தேகநபர்கள் கைது!

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் மற்றும் மது பானம் விநியோகிக்கப்படுகின்றமை தொடர்பில் மேல் மாகாணத்தில் 2



## வியட்நாமில் உயிரிழந்தவரின் சடலம் நேற்று வந்து சேர்ந்தது

அண்மையில் அகதிக் கப்பல் மூலமாக கனடா செல்ல முற்பட்டிருந்த நிலையில் வியட்நாம் நாட்டில் மரணமடைந்த சாவகச்சேரியை சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரனின் சடலம் நேற்று விமானம் மூலமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது 19



## 15 நாடுகளின் தூதரகத் தலைவர்கள் வடக்கு நிலவரத்தைக் கேட்டறிந்தனர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.18

இலங்கைக்கான 15 நாட்டுத் தூதரகங்களின் தலைவர்கள் யாழில் மாவட்டச் செயலாளர், தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் ஆளுநர் செயலகத்தில் நேற்று இச்சந்திப்பு இடம்பெற்றது.

பிரான்ஸ், பஹ்ரைன், வியட்நாம், ஜேர்மனி, லெபனான், குவைத், இஸ்ரேல், 2

## இலங்கை நாட்டின் பன்முகத்தன்மை அரசமைப்பு பேரவையில் கட்டாயம்!

### வலியுறுத்துகிறது தேசிய சமாதானப் பேரவை

அரசமைப்புப் பேரவையில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை சிபாரிசு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கும் தேசிய சமாதானப் பேரவை நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கக்கூடியதாக அரசமைப்பு பேரவை அமையவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறது.

இது தொடர்பாக விடுத்திருக்கும் 2

ஸ்ரீ லங்கா ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவருக்கு இடையிலான பணக் கொடுக்கல் - வாங்கல் காரணமாக இந்தப் படுகொலை நிகழ்ந்திருக்கலாம் என்று ஆரம்பத்தில் நம்பப்பட்டது.

இப்போது ஒரு புதிய தகவலும் சேர்ந்து கொண்டுள்ளது.

நல்லாட்சி அரசின் காலத்தில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி விவகாரத்தில் பல்லாயிரம் கோடி ரூபா நாட்டுக்கு இழப்பு ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

அதை ஒட்டி விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணை குழுவுக்கு அந்த மோசடி குறித்து பல முக்கிய தகவல்களை சாட்சியமாக வழங்கியவர் தினேஷ் ஈப்டர் என்று இப்போது தகவல் கசிந்து இருக்கிறது.

இந்தப் படுகொலைக்கு அந்த விடயமும் காரணமாக இருக்குமா, பிணைமுறி விசாரணைகளுக்கு மீண்டும் உருவேற்றும் பணியில் முக்கிய சாட்சியான இவர் ஈடுபட்டமையால் அதற்காக இலக்கு வைக்கப்பட்டாரா என்ற கோணத்திலும் பொலிஸ் விசாரணை நடப்பதாகத் தெரிகிறது.

***

டிசம்பர் இறுதி வாரத்தில் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தலைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டாலும் அதற்குப் பின்னரும் கூட அந்தத் தேர்தல் ஒத்திவைப்பு நடவடிக்கையை அரசு முன்னெடுக்கக் கூடும் என சில செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டு இருக்கின்றன.

ஏற்கனவே தாமதமாகியிருக்கும் உயர்தர பரீட்சையை ஜனவரி 28 முதல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்தப் பரீட்சைச் சமயத்தில் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது, தேர்தலுக்கு ஒதுக்கீடு செய்யப் போதிய நிதி இல்லை என்பன போன்ற பல்வேறு இடர்களைக் காரணம் காட்டித் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

ஏன், வேட்பு மனுத் தாக்கல் நடந்த பின்னரும் கூட தேர்தல் நடத்தப்படாமல் தள்ளிப் போடப்படுவதற்கு சாத்தியங்கள் உண்டு என்று கூறும் அரச வட்டாரங்கள், இதற்கு முந்திய தசாப்தத்தில் அப்படி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நீதிமன்ற உத்தரவினால் தள்ளிப் போய் இருக்கின்றமையையும் சுட்டிக் காட்டின.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு, பூர்த்தியாகாமல் 'திரிசங்கு' நிலையில் தொங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பது அந்த வட்டாரங்களில் கருத்தாக உள்ளது.

மேலும் விவரங்களை அடுத்து வரும் தினங்களில் பார்க்க முடியும் என்று நம்புவோம்.

**- மின்னல் -**

## வடக்குக் கடலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் இருந்து சுமார் 30 நோட்டிக்கல் தொலைவில் அதிகளவானோரை ஏற்றிய படகு ஒன்று நிற்பதனை அவதானித்த மீனவர் ஒருவர் படகை அண்மித்து அவதானித்தசமயம் படகில் இருந்தவர்கள் சிறுவர்களை தூக்கி காண்பித்தமையினால் படகு ஆபத்தில் நிற்பதனால் உதவி கோருகின்றனர் என்பதனை மீனவர் ஊகித்துக்கொண்டார்.

இதனையடுத்து கரை திரும்பிய மீனவர் வழங்கிய தகவலின் பெயரிலேயே சம்பவ இடத்திற்கு கடற்படையினர் சென்றுள்ளனர்.

கடற்படையினர் சம்பவ இடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட படகை அவதானித்து படகை மீட்டு காங்கேசன்துறைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

இதனிடையே மீட்கப்பட்ட படகு சேதம் காரணமாக விரைந்து பயணிக்க முடியாத காரணத்தாலும் வெளிநாட்டவர்கள் என்பதனால் இதற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்களினாலும் நேற்றிரவு படகை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வருவதில் தாமதம் நிலவியதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## பிரிபடாத நாட்டுக்குள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்தார். மனோ கணேசனின் இல்லத்தில் நிகழ்ந்த இச்சந்திப்பில் த.மு.கூ. நுவரெலிய மாவட்ட எம்.பியான எம். உதயகுமாரும் கலந்து கொண்டார்.

இதன்போது எரிக் சொல்ஹெய்ம் ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது:-

நான் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அவரது காலநிலை ஆலோசகராக இங்கே வந்துளேன்.

இந்தச் சந்திப்பில், மனோ கணேசன் எனக்கு சமீபத்தில் ஜனாதிபதி நடத்திய சர்வ கட்சி மாநாட்டை பற்றி எடுத்து கூறினார். அது நல்லது. இந்நாட்டில் இனப்பிரச்சினை தீர இது நல்ல வேளை.

இந்நாட்டில் சிங்கள, வடகிழக்கு தமிழர், முஸ்லிம்களுடன், இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் சமமாக இணைந்து வாழ விரும்புவதை அவர் எனக்கு கூறினார்.

மேலும், பெருந்தோட்டங்களில் வறுமை நிலையில் வாழும் மக்களை பற்றியும் கூறினார். உணவின்மை, வறுமை காரணமாக துன்புறும் அவர்கள் மீது சர்வதேச சமூகம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என நான் விரும்புகிறேன்.

நண்பர் மனோ கணேசன், தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளையும் இங்கு பேசுகிறார். அது மிகவும் சிறந்தது. அவரது பிறந்த நாளுக்கு எனது வாழ்த்துக்கள். - என்றார்.

மனோ எம்.பி. இச்சந்திப்புப் பற்றி மேலும் கூறியதாவது:-

வரலாற்றில் எல்லோரும் தவறிழைத்துள்ளோம். கடைசி சமாதான முயற்சி தோற்றது. இதற்கு சில தரப்புகளோ, அனைத்து தரப்புகளுமோ காரணம். அதுபற்றி ஆராய்ச்சி செய்ய இது வேளையல்ல. அது எனது வேலையுமல்ல.

இப்போது நாம் வரலாற்றில் இருந்து பாடம் படித்துள்ளோம். ஆகவே முன்னோக்கி நகர எமக்கு உதவுங்கள்.

இங்கே நண்பர் எரிக் சொல்ஹெயிம் கூறியதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எரிக் சொல்ஹெயிம் இலங்கையில் மிகவும் அறியப்பட்ட ஒரு வெளிநாட்டுக்காரர். அவரது தொடர்புகளையும், அனுபவத்தையும் பயன்படுத்த இதுதான் வேளை.

பிரிபடாத இலங்கைக்குள் நிரந்தர தீர்வை அடைய எமக்கு உதவுங்கள். உங்கள் நண்பர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இதை எடுத்து கூறுங்கள்.

இதை நீங்கள் செய்து இந்நாட்டின் இனப்பிரச்சினை தீர்வுக்கு உதவுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் நான் என் பிறந்த நாளை கொண்டாடுவேன்.

இலங்கையின் சமூக பரப்பில் ஏற்பட்டுள்ள புதிய வளர்ச்சி போக்கை நீங்கள் கவனிக்க வேண்டும்.

கடந்த காலங்களை விட இன்று இந்திய வம்சாவளி மலையக மக்கள் ஓர் இனமாக வளர்ச்சி அடைந்துள்ளார்கள்.

அவர்கள் பெருந்தோட்ட தொழிலாளர் மட்டுமே, அவர்களது பிரச்சினை பெருந்தோட்ட பிரச்சினைகள் மட்டுமே, என்ற காலம் மாறி விட்டது.

இன்றைய இனப்பிரச்சினை தீர்வில் அவர்களுக்கும் சம பங்கு வேண்டும். வடகிழக்கு சகோதர உடன்பிறப்பு, முஸ்லிம் உடன்பிறப்பு மற்றும் சிங்கள உடன்பிறப்புகளுடன் நாம் சமமாக வாழ விரும்புகிறோம். இனிவரும் இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளில் இந்த புது வளர்ச்சி போக்கை கவனத்தில் கொள்ளுங்கள். - என்றார்.

## மாணவருக்குப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 75 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை மேல் மாகாணத்திலுள்ள 122 பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புக்களின் போதே இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றி வளைப்புக்களின் போது மாவா எனப்படும் போதைப்பொருள் 2 கிலோ 148 கிராம், ஹெரோயின் 9 கிலோ 375 மில்லி கிராம், ஐஸ் 1 கிலோ 522 மில்லி கிராம் மற்றும் 10 மதுபான போத்தல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுடைய ஆலோசனைக்கமைய இந்த சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளன.

## 15 நாடுகளின் தூதரகத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதியோப்பியா, சுவிஸ், பிலிப்பைன்ஸ், ஜோர்தான், ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளின் தூதரகத் தலைவர்களே யாழ். வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கலந்துரையாடல் 3 கட்டங்களாக இடம்பெற்றது. இதில் உத்தியோகத்தர்கள், தொண்டு நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைப்புக்கள் என இச்சந்திப்புகள் பிரிக்கப்பட்டு இடம்பெற்றன.

இதன்போது வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அதிகாரிகளிடம் வடக்கின் நிலைவரம், வடக்கின் தேவைகள் தொடர்பில் அவர்கள் கேட்டறிந்துகொண்டமையோடு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபரிடமும் மீள்குடியேற்ற அமைப்புக்களிடமும் மேலதிக விவரங்களைக் கேட்டறிந்துகொண்டனர்.

## இலங்கை நாட்டின் .....

ஊடக அறிக்கையில் சமாதானப் பேரவை கூறியிருப்பதாவது:-

அரசமைப்புப் பேரவை மீண்டும் அமைக்கப்படுவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் மட்டுமீறிய அதிகாரங்களைக் குவித்த அரசமைப்புக்கான 20 வது திருத்தத்தை ரத்துச் செய்து அண்மையில் கொண்டுவரப்பட்ட 21 ஆவது திருத்தத்தின் மிகவும் நலமிக்க அம்சமாகும். அரசமைப்புப் பேரவை அரசாங்க உறுப்பினர்களையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் பக்கச்சார்பற்ற சிவில் சமூக உறுப்பினர்களையும் உள்ளடக்கிய அரசியல் ரீதியில் பக்கச்சார்பற்ற ஒரு அமைப்பாகும்.

அரசும் அதன் நிறுவனங்களும் நாட்டின் நலன்களுக்காக சிறப்பாக செயற்படக் கூடியதாக அவற்றை வலுப்படுத்துவதற்கு அரசமைப்புப் பேரவை பங்களிப்புச் செய்யும் என்பதே நேர்மறையான எதிர்பார்ப்பாகும்.

ஆனால், அரசமைப்புப் பேரவையில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தப் போகும் உறுப்பினர்களை நியமிப்பதற்கு கடைப்பிடிக்கப்படும் முறை விசனத்தைத் தருவதாக இருக்கிறது. பேரவையில் உறுப்பினராக இருக்க விரும்புபவர்களிடம் இருந்து தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்கள் கோரப்படவிருப்பதாக அரசாங்கம் விளம்பர அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

எந்தவொரு அரசியல் கட்சியிலும் உறுப்புரிமையைக் கொண்டிருக்காமல், பொதுவாழ்விலும் துறைசார் வாழ்விலும் தங்களுக்கென்று ஒரு பெயரை ஏற்படுத்திக்கொண்ட நேர்மையும் மேன்மையும் மிக்க நபர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு விரும்பாமல் இருக்கலாம்.

நியமனங்களைச் செய்வதற்கான ஏற்பாடொன்று இந்த நடைமுறைகளில்

(19ஆம் பக்கம் பார்க்க)





காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் உள்ள விளையாட்டுக் கழகங்களின் பதவிகளுக்கும் இரட்டை குடியுரிமைக்கு ஆப்பு!

## புதிய சட்டம் வருகிறது என்கிறார் அமைச்சர்


விளையாட்டுச் சட்டத்தில் பல புதிய விதி முறைகளை விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள எந்தவொரு விளை யாட்டுக் கழகத்திலும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் பதவிகளை வகிக்க முடியாத வகையில் விளையாட்டுச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், விளையாட்டுக் கழகங்களின் எந்தவொரு அதிகாரி அல்லது குழு உறுப்பி னரின் அதிகபட்ச வயதை 70 ஆக மாற்றவும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.



விளையாட்டுச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங் கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அவர் இந்த திருத்தங்களை கொண்டுவந்துள்ளார்.




# முட்டையின் விலை சந்தையில் எகிறல்!

முன்னதாக எதிர்வுகூறப்பட்டதை போலவே தற்போது, சந்தையில் முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக அறியமுடி கின்றது.

நுகர்வோர் அதிகார சபையால் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித் தலை இடைநிறுத்த தீர்மானித்ததையடுத்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஒகஸ்ட் மாதம் வெள்ளை முட்டை ஒன்றின் விலை 43 ரூபாவாகவும் சிவப்பு நிற முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாகவும் நுகர்வோர் அதிகாரசபை நிர்ணயித்திருந்தது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை பெப்ரவரி 6 ஆம் திகதி வரை இடைநிறுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன் றம் வியாழக்கிழமை தீர்மானித்ததையடுத்து அதுவரை 50 ரூபா வாக விற்பனை செய்யப்பட்ட முட்டையின் விலை அதிகரித்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முட்டைக்கான அதிகபட்ச விலையை நிர்ணயிக்கும் திறனை நுகர்வோர் விவகார அதிகாரசபை தற்காலிகமாக இழந்ததைய டுத்து, உற்பத்தியாளர்கள் தங்களுக்குத் தேவையான விலையை நிர்ணயித்துள்ளனர்.




# நாவலர் பெருமானின் 200ஆவது ஜனன தினத்தில் அவர் ஆரம்பித்த கஞ்சித் தொட்டித் தர்மத்தை தொடருவோம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் ஜனன தினமாகிய இன்று உலகின் பல பாகங்களிலும் அவர் தமிழுக்கும் சைவத்திற்கும் செய்த சேவைகளை நினைந்து குருபூசைகள், விழாக்கள் நடைபெறுகின்றன. அவரின் பணிகளில் ஓர் உன்னதமான சமூகப் பணி என கருதப்படுவது "கஞ்சித் தொட்டித் தர்மம்"! அவர் வாழ்ந்த காலத்திலே எமது நாட்டில் பஞ்சமும், நோய்ப்பிணியும் ஒரே காலத்தில் ஏற்பட்டது. மக்களின் துயர் துடைக்க நாவலர் கஞ்சித் தொட்டித் தர்மம் என்ற திட்டத்தினை ஆரம்பித்து கிராமம் தோறும் மக்களுக்கு கஞ்சி வழங்கி பசிப்பிணியைத் தீர்த்தார். இதனை தமிழ் மக்களாகிய நாம் இன்றும் நன்றியுணர்வுடன் நினைந்து போற்றுகின்றோம். இந்த கஞ்சித் தொட்டித் தர்மம் இக்காலத்துக்கும் மிகவும் பொருத்தமானது.

நமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சிக்கலினால் மக்கள் அன்றாட உணவுக்கு மிகவும் கஸ்ரப்படுகிறார்கள். பல மாணவர்கள் காலை உணவு உண்ணாமல் பாடசாலைக்கு வருகின்றார்கள். குறிப்பாக பின்தங்கிய கிராமப்புற பாடசாலைகளில் இது ஒரு பெரும் பிரச்சனையாக உள்ளது. கடந்த பல வருடங்களாக அரசாங்கம் பாடசாலைகளில் மதிய உணவு வழங்கி வந்ததை நாம் அறிவோம். இவ்வாண்டு ஆரம்பத்தில் இருந்து இந்த மாணவர்களுக்கு உணவு வழங்குதல் தடைப்பட்டுவிட்டது. இதனால் மாணவ சமூகம் மிகவும் பாதிப்படைந்துள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இத்திட்டத்தினை மீள ஆரம்பித்தாலும் ஐந்தாம் வகுப்புக்கு உட்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே உணவு வழங்கப்படுகின்றது. இத்தருணத்தில் மாணவர்களின் பசியைப் போக்க வேண்டியது நமது தலையாய கடமை. எமது ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் கோப்பாயில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் ஸ்தாபிக்கப்பட்ட கோப்பாய் நாவலர் பாடசாலையில் கடந்த ஜீலை மாதம் நாவலரின் கஞ்சித் தொட்டித் தர்மத்தை மீள ஆரம்பித்து மேலும் பல பாடசாலைகளுக்கு விரிவுபடுத்தி மாணவர்களுக்கு மதியம் கஞ்சி வழங்கி வருகின்றோம். இதைப் போன்ற உணவு வழங்கும் திட்டங்களை மேலும் பல பாடசாலைகளில் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றார்கள். ஆனால் மேலும் ஏராளமான பாடசாலைகளில் ஆறாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் இன்றும் பசியுடன் பாடசாலைக்கு வரும் நிலை தொடர்கிறது.

நாவலரின் ஜனன தினமாகிய இன்று நாம் சைவத்தமிழ் மக்களுக்கு பணிவாக விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் உங்கள் ஊர் பாடசாலைகளில் எவ்வாறு உணவு விநியோகம் நடைபெறுகிறது என்பதை அறிந்து பாடசாலை சமூகத்துக்கு உதவ வேண்டும். இப்பணியில் புலம்பெயர் சமூகம் தமது பங்களிப்பை முழுமையாக செலுத்தி எமது மாணவர்கள் பசியின்றிப் பாடசாலைகளில் கல்வி கற்க ஆவன செய்ய வேண்டும். இக்கட்டான இப் பொருளாதார சூழ்நிலையில் அரசாங்கத்தால் முழுமையாக மாணவர்களுக்கு உணவு வழங்கமுடியாதென்பது எமக்குப் புரிகிறது. எனவே இப்பணியில் நாமும் இணைந்து மாணவர்களின் பசியைப் போக்குவோம். நாவலர் பெருமானின் வழி நின்று கஞ்சித் தொட்டித் தர்மத்தை தொடர்வோம்.

**-ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்.**









காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழினத்தின் ஆன்மா

தமிழ்த் தேசிய பரப்பில் இன்றைய நிலையில் முக்கிய வகிபாகத்தை கொண்டிருக்கும் இலங்கை தமிழரசு கட்சி இன்று 74 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அதன் மூத்த தலைவரான இரா.சம்பந்தனின் வார்த்தைகளில் கூறுவதாயின் "தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் ஆன்மாவினது சின்னமாக விளங்குவதும், உயரிய விழுமியங்களுடன் தனக்கெனத் தனித்துவமான பாரம்பரியத்தைக் கொண்டதுமான தமிழரசுக் கட்சி" என்று விவரிக்கலாம். அவரின் சொல்லாடல்களிலேயே மேலும் கூறுவதானால் –

"இலங்கைத் தமிழரசுக் கட்சியானது, அதன் பிதாமகரான, தேசத் தந்தை சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களால் தமிழர்களுக்கென இந்தத் தீவில் ஒரு சுயாட்சி அரசை நிறுவ வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்சி. தனது கொள்கையையே தனது பெயராகவும், அந்தக் கொள்கையையே தனது இயங்கு விதியாகவும் கொண்டிருக்கின்ற கட்சி. இருந்தாலும், எமது கட்சியின் பெயர், எமது கட்சியின் கொள்கையை மட்டும் எடுத்தியம்பி நிற்கவில்லை; அது – எமது இனத்தின் வரலாற்றையுமே குறித்து நிற்கின்றது. இந்தத் தீவில், தமிழர்கள், உன்னதமான சமூக பண்பாட்டு வாழ்வை மட்டுமல்லாது, தன்னிறைவான ஒரு பொருளாதாரப் பொறிமுறையையும் முன்பொரு காலத்தில் கொண்டிருந்தனர்; தமக்கெனத் தனித்த அரசுகளை நிறுவி, சீரிய முறையில், ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை, அவர்கள் தம்மைத் தாமே ஆண்டனர். பின்னர், இந்தத் தீவை வன்கவர்வு செய்த வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள், தமது இலகுவான ஆளுதலுக்காக, முழுத் தீவையும் ஒரே நாடு என்று ஆக்குகின்ற வரையில் – இந்தத் தீவில் இறைமையுடைய தமிழரசுகளை எமது இனம் கொண்டிருந்தது என்ற வரலாற்றின் குறியீடாகவும் எமது கட்சி திகழ்கின்றது.

"எமது கட்சியின் சின்னமாக, எமது தேசபிதா அவர்கள் தேர்ந்தெடுத்த 'வீடு' என்பதும் அதையே குறிக்கின்றது. இந்த 'வீடு' என்பது எமது இனத்தின் இல்லம்; எமது இனத்தின் தாயகம்; எமது இனத்தின் இறையாண்மை. எமது இனத்தின் இல்லத்தை, எமது இனத்தின் தாயகத்தை, எமது இனத்தின் இறையாண்மையை, மீளவும் மீட்டெடுத்து, எமது இனத்திற்கே அதிகாரபூர்வமாக உரித்துடைய தாக்கிவிடுவதுதான் எமது கட்சியின் அடிப்படைக் கொள்கை. எமது கட்சியின் அந்த அசையாத கொள்கையைத்தான் எமது கட்சியின் சின்னமான 'வீடு' பிரதிபலித்து நிற்கின்றது." – இவை சம்பந்தன் சொன்ன வார்த்தைகள்.

இனி, ஐம்பதுகளில், அறுபதுகளில் இயங்கிய தமிழரசு குறித்து மதியுரைஞர் பாலசிங்கம் கூறியவற்றை பார்க்கலாம்.

"சமஷ்டிக் கட்சி மக்களின் பேராதரவைப் பெற்று வெற்றி கண்டதற்குக் காரணம், தமிழ் இனத்தின் மீது சிங்கள அரசு தொடுத்த ஒடுக்குமுறைத் தாக்குதலின் உக்கிரத்தை அந்தக் கட்சி உணர்ந்து கொண்டதேயாகும். பன்முக ஒடுக்குமுறையின் வேகத்தில், தமிழ்த் தேசியத்தின் வடிவமும் அடையாளமும் பாதிக்கப்பட்டுவிடும் என்பதை அந்தத் தலைமை புரிந்து கொண்டது. இந்த ஆபத்தின் அச்சுறுத்தலை அவர்கள் மக்களிடம் தெரிவித்தார்கள். பல்வேறு மட்டங்களில் உள்ள தமிழ் மக்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பினார்கள். தனித் தனி உதிரிகளாக வேறுபட்டு முரண்பட்டு நின்ற வர்க்கத்தினரையும் சாதியினரையும் அணிதிரட்டி, தொடர்ச்சியான வெகுசனப் போராட்டத்தில் களமிறங்கிய சமஷ்டிக் கட்சி ஒரு வலுவான தேசிய இயக்கமாக வடிவெடுத்தது." – இவை பாலசிங்கத்தின் கூற்று.

இவற்றுக்கெல்லாம் நேர்மையாக, நீதியாக தமிழரசு நிர்வாகிகள் இப்போது கட்சியை நடத்துகின்றார்களா? கேள்வி மட்டுமே எங்களுடையது. பதில் அவர்களின் மனசாட்சியைத் தொட்டும்.

## பலவருட பிரச்சினையை வெறும் இரண்டு மாதத்துக்குள் முடிப்பது சாத்தியமற்றது!

### அங்கஜனும் இப்படிக் கருத்து



பலவருட பிரச்சினையை வெறும் இரண்டு மாதத்துக்குள் முடிப்பது என்பது ஒரு பொய்யான காரியம். ஆனால் அந்தத் தினத்திற்குள் வரக்கூடிய இணக்கப்பாடு ஒரு நல்ல தீர்வுத் திட்டத்தை கொண்டுவருவதற்கு வாய்ப்புள்ளது என அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அராலியில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற மக்கள் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், அந்த இணக்கப்பாட்டில் மக்களுக்கு தேவையான அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

நல்லிணக்கத்தின் ஊடாக கிடைக்கப்பெறும் இந்தத் தீர்வு திட்டத்தினுள் பொருளாதார, அபிவிருத்தி இடைவெளியை நிரப்புவதற்கு, ஏனைய மாகாணங்களில் இருக்கும் வாய்ப்புகள் எம்மவர்களுக்கும் கிடைப்பதற்கும் வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இராணுவம், கடற்படை, வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் பிடியில் இருக்கின்ற மக்களின் நிலங்களை மீண்டும் கையளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அங்கஜன் இராமநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## காணாமல்போனோர் அலுவலகத்தால் முல்லையில் விசாரணை முன்னெடுப்பு!

### 244 பேருக்கு அழைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் காணாமல் போனோர் அலுவலகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு உள்ளிட்ட ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 244 பேருக்கே இவ்வாறு விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நாளை (திங்கட்கிழமை) கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 29 பேருக்கும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 16 பேருக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 37 பேருக்கும், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 32 பேருக்கும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 08 பேருக்குமாக 122 பேருக்கும் மறுநாள் செவ்வாய்க்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 10 பேருக்கும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 28 பேருக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 39 பேருக்கும்,துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 32 பேருக்கும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 13 பேருக்குமாக 122 பேருக்குமாக 244 பேருக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை வர்த்தகர் தினேஸ் ஷாப்டர் படுகொலை; விசாரணைகளில் மேலும் பல பொலிஸ் குழுக்கள்!



இலங்கை வர்த்தகர் தினேஸ் ஷாப்டர் படுகொலை தொடர்பான விசாரணைகளை மேலும் பரந்துபட்ட அளவில் முன்னெடுப்பதற்காக பல பொலிஸ் குழுக்களை நியமித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கனத்தை பொதுமயானத்தில் இடம்பெற்ற படுகொலைக்கான தெளிவான காரணத்தை இன்னமும் கண்டறியமுடியவில்லை எனத் தெரிவித்துள்ள அந்தப் பொலிஸ் அதிகாரி, மேற்படி பகுதியில் காணப்படும் சிசிரிவி கமரா பதிவுகளை ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பகுதியில் இயங்கிய கையடக்கத்தொலைபேசிகள் குறித்த தகவல்களை பெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காரை தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளோம் என பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பலகோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். நம்பத்தகுந்த காரணங்களை கண்டறிய முயல்கின்றோம், அவருடைய வர்த்தக சமூக தொடர்பில் உள்ளவர்களை கருத்திலெடுத்துள்ளோம், திறந்த மனதுடன் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் 38 பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்!

இலங்கையில் உள்ள 38 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக அண்மையில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

வேறு நாடுகளில் உள்ள சிவில் ஏவியேஷன் நிறுவனங்கள் வழங்கும் அதிக சம்பளம் மற்றும் வசதிகள் காரணமாக அவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலைமை காரணமாக இலங்கையில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இது இன்று நாட்டின் அனைத்து துறைகளிலும் காணப்படும் பொதுவான பிரச்சினை என்றார்.

இருபத்தைந்து புதிய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் பணியமர்த்தப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த காலங்களில் பல விமானிகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கம்பா தோட்டத்தில் தொழிலாளர்களுக்கு முழுப்பேர் வழங்க நிர்வாகம் இணக்கம்!

கொழும்பு, டிசெ. 18

வெலிமடை கம்பா தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தால் அரைப்பேர் வழங்குவதாக தோட்டத் தொழிலாளர்கள் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, அங்கு நேரடி விஜயம் மேற்கொண்ட செந்தில் தொண்டமான் தோட்ட தொழிற்சாலையில் இருந்து தேயிலை தூள் வெளியேற்றப்படுவதை இடைநிறுத்தினார்.

இந்நிலையில் செந்தில் தொண்டமான் தோட்ட நிர்வாகத்துடன் முன்னெடுத்த பேச்சின் பிரகாரம் தொழிலாளர்களுக்கு முழுப்பேர் வழங்க நிர்வாகம் இணங்கியதால் தேயிலைத் தூளை வெளியேற்ற அனுமதியளிக்கப்பட்டுள்ளது.



# முல்லைத்தீவில் மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆய்வு!




முல்லைத்தீவு, டிசெ. 18

மாற்றுத்திறனாளிகள் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொண்டு வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்கள், நேற்று காலை மாவட்ட அரசாங்க அதிபரிடம் தமது பிரச்சினைகள் தொடர்பாக மகஜர் கையளித்தனர் எனவும் கூறியுள்ளனர்.

மேலும் பஸ்களில் ஆசனங்கள் ஒதுக்கீடு தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் நடவடிக்கையிலும் தாம் ஈடுபட்டனர் என மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.






## தாயாரின் கவனவீனத்தால் மூன்றுக் மாத குழந்தை பலி!

முல்லேரிய அம்பத்தலே பிரதேசத்தில் உள்ள வீட்டின் அறையில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று மாத குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாகபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தண்ணீரை சூடாக்க பயன்படுத்தப்படும் மின்சார ஹீற்றரில் இருந்து தீ பரவியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட போது உயிரிழந்த குழந்தையின் தாயும் அவரது மூத்த பிள்ளையும் வீட்டில் இருந்து வெளியில் இருந்துள்ளனர்.

வீட்டில் இருந்து புகை வருவதைக்கண்டு தாயாருக்கு அவரது மூத்த பிள்ளை தெரியப்படுத்தியபோதே அவர்கள் குழந்தை படுக்கையில் எரிந்து கிடப்பதை பார்த்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், தீ விபத்து ஏற்பட்ட வீட்டில் உள்ள மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அருகில் உள்ள வீட்டில் இருந்து பாதுகாப்பற்ற நிலையில் மின்சாரம் பெற்றுக்கொண்டுள்ளனர். பாதுகாப்பற்ற நிலையில் மின்சார ஹீற்றரை பயன்படுத்தி யுள்ளனர் எனவும் அதிலிருந்தே தீ பரவி விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் தாய் ஹீட்டரை அணைக்காமல் வீட்டை விட்டு வெளியே சென்ற போது ஹீற்றரில் தீப்பிடித்து அதிலிருந்து கசிந்த நீர் குழந்தை உறங்கிக் கொண்டிருந்த மெத்தையில் பரவியதாகவும் பொலிஸ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயிரிழந்த குழந்தையின் தந்தையும் போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறையில் உள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைபோன்று நைஜீரியாவும் வங்குரோத்தடையும் அபாயநிலை!

நாணய மாற்று விகிதத்தை சீரமைத்தல் மற்றும் எரிபொருள் மானியத்தை நீக்குதல் போன்ற பிரச்சினைகளைச் சமாளிக்கும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தாவிடில், நைஜீரியாவும் இலங்கையைப் போன்று திவாலாகும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இந்த நிலையில் ஒரு புதிய வளர்ச்சி பாதையை பட்டியலிடுவதற்காக பெற்றோல் மானியம் மற்றும் பல மாற்று விகிதங்களை நீக்குமாறு உலக வங்கி, நைஜீரியாவை வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய மானியத் திட்டங்களால் நைஜீரியாவின் மத்திய அரசாங்கத்தை விட மாநில அரசுகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தணிப்பதற்கான விடயங்களில் அதிக கவனம்!

## செலுத்தவுள்ளோம் என்கிறார் ஜனாதிபதி




'மில்லியன் மரங்களை நடுவது தொடர்பிலான உங்களது பிரசாரத்தை நான் கண்டேன். அடுத்த வருடம் முழுவதும் நாம் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்களைத் தணிப்பதற்கான விடயங்களில் அதிக கவனம் செலுத்தவுள்ளோம். சில சட்டங்கள் நிறைவேற்றப்படும். நகர் வனங்கள் மற்றும் இன்னும் பல செயற்திட்டங்களை நாம் ஆரம்பிக்க வேண்டும். இதுபோன்ற சில செயற்திட்டங்களில் ரொட்டரியிலுள்ள நீங்களும் பங்கெடுப்பீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். இது தொடர்பிலும் ரொட்டரியிடம் உதவி கேடக வேண்டுமென எனக்குத் தோன்றியது' என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், நெருக்கடியான சந்தர்ப்பங்களின்போது அரசாங்கம் புத்தாக்கமுடைய வகையில் செயற்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அதேநேரம் நாட்டை எவ்வாறு உலகின் முன்னணி நிலைக்கு கொண்டு செல்லலாம் என்பதை, தைரியமாக பார்வையிட வேண்டுமென்றும் தெரிவித்த ஜனாதிபதி, இதுவொன்றும் கடினமான, முடியாத காரியம் அல்லவென்றும் கூறினார்.

அடுத்த 25 வருடங்களில் இந்நாட்டை மிகவும் அழகான, உறுதியான நாடாக உருவாக்குவதற்கு பொதுமக்களின் அர்ப்பணிப்பு அவசியமென்றும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதிக்கென தனித்துவமாக வரையப்பட்ட ஓவியம் ஒன்றை ரொட்டரி கழகத்தின் சர்வதேச தலைவர் ஜெனிபர் ஜோன்ஸ் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

முதற்பெண்மணி பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, ரொட்டரி கழகத்தின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். ஜனாதிபதி இங்கு மேலும் உரையாற்றியவை வருமாறு –

ஒரு கடனை திருப்பிச் செலுத்துவதற்காகவே நான் இங்கே வந்துள்ளேன். நான் பிரதமராக இருந்த சந்தர்ப்பத்தில் நிலைமை சற்று மோசமாக இருந்தபோது என்ன செய்வதென்று தெரியாமல் இருந்த காலகட்டத்தில் மருந்து தட்டுப்பாடு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. அப்போது ஹெலிய என்னிடம் வந்து தயவுசெய்து மருந்து வாங்குவதற்காக எனக்கு கொஞ்சம் நிதியை ஒதுக்கித் தாருங்கள் என்று கேட்டார். அப்போது நாம் முற்றிலும் ஒடிந்துபோயிருந்தோம். நான் என்ன செய்ய முடியும்? இதற்காக ரவியிடமும் ரொட்டரியிடமும் செல்வதே சரியென நான் நினைத்தேன். அவர்களும் முன்வந்து இந்த உயிர்நாடியை ஆரம்பித்தார்கள். எவ்.ஏ.கியு. உடன் இணைந்து பணியாற்றுமாறு அவர் கூறியமை போல, நாம் அனைவரும் ஒன்றுகூடியதுடன் மருந்துகளையும் பெற்றுக் கொண்டோம். எனவே ரொட்டரிக்கும், ரவிக்கும் நன்றிகள்.

உக்ரையின் யுத்தம், உரப் பற்றாக்குறை ஆகியவற்றால் உணவு நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் அடுத்த வருடமளவில் உணவு பாதுகாப்பில் நாம் தன்னிறைவுக் கொண்டவர்கள் என்பதை உறுதிபடுத்தப் வேண்டும். நீங்கள் எமது அடுத்த நிகழ்ச்சித் திட்டமான தேசிய உணவு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும்.

நாம் ஏற்கனவே இதை ஆரம்பித்து விட்டோம். எமது நாட்டில் போதுமானளவு உணவு உள்ளது என்பதை உறுதி செய்வதற்கான பிரசாரங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். இதற்காக அரச மற்றும் தனியார் துறையுடன் இணைந்து செயற்படும் அரச பொறிமுறையொன்றையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம். மாவட்ட செயலாளர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்படும் இந்த வேலைத் திட்டம் பின்னர் தலைமைத்துவத்தை வழங்குவதற்காக பின்னர் மக்களிடம் கையளிக்கப்படும்.

மாவட்ட செயலகத்தின் கூட்டுப் பொறிமுறையுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். அரச திணைக்களங்கள், மாகாண நிறுவனங்கள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து, அவற்றை உள்ளூர் அமைப்புக்களுடன் இணைந்து செயலாற்றுமாறும் பணித்துள்ளோம்.

பல்வேறு மக்களும் இத்தொகுதிகளை பொறுப்பேற்றுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்தப் பிராந்தியத்திலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள், சமூக சேவை அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், தனியார் துறையினர் என பலரும் இதில் இணைந்து கொண்டுள்ளனர்.

எனவே நீங்களும் உணவு பயிர்ச்செய்கை, களஞ்சியப்படுத்தல் மற்றும் நகர்புறங்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய செயன்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்காக சில தொகுதிகளை பொறுப்பேற்க வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

மறுபுறத்தில், கொழும்பின் சில தொகுதிகளில் உள்ளது போல போஷாக்கின்மை மற்றும் உணவு இல்லாதவர்களுக்கு எவ்வாறு உணவைப் பெற்றுக்கொடுப்பது உள்ளிட்ட விடயங்களிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

நாடு முழுவதும் நாம் உணவு உற்பத்தி செய்கின்றோம். உணவு இல்லாதவர்களை அடையாளம் காண்கின்றோம். அவர்களுக்கு உடனடியாக உதவுவதற்கு முயற்சிக்கிறோம். சமூக சமையலறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இதுவே அதற்கான சரியான தருணம். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து உணவு பாதுகாப்பு பிரசாரத்துக்காக எம்முடன் இணைவீர்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. எவரும் பசியுடன் இருக்க மாட்டார்கள் என்பதை நாம் உறுதி செய்தாக வேண்டும்.

சில மக்கள் மிகவும் நெருக்கடியான காலப்பகுதியை எதிர்கொண்டுள்ளனர். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தால் அவர்களைப் பராமரிப்பதற்காக எம்மிடம் போதுமான வளங்கள் இருக்குமென நான் நினைக்கின்றேன். எனவே நீங்கள் எமக்கு கொடுத்த உயிர் நாடிக்கு மிக்க நன்றி. அது தொடரும் அதேநேரம் எமது இந்த பிரசாரத்துடனும் நீங்கள் இணைந்து கொள்ள வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

ரொட்டரி என்பது நன்மைக்கான ஒரு சக்தி. அரசியல், சமூக அல்லது பொருளாதார பிரிவுகளாலும் அதிகமாக வெறுப்பினாலும் இந்த உலகில் பிளவுபட்டுள்ள மனிதர்களை சமூகம் என்ற அடிப்படையில் ஒன்றாக சேர்க்கின்றது. உலகிலுள்ள வெறுப்புணர்வு அதிகரித்துச் செல்கிறது. அந்தவகையில் சில நல்ல செயற்பாடுகளுக்காக சக்திகள் இருக்க வேண்டும். அந்த நல்ல சக்தியாகவே ரொட்டரியும் செயற்பட்டு வருகிறது.

நீங்கள் சிக்காகோவில் இருந்தபடி உலகம் முழுவதும் பரந்து செயற்படுகின்றீர்கள். தற்போது நீங்கள் வட கொரியாவை தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு நாட்டையும் இணையத்திற்கூடாக சென்றடைந்துள்ளீர்கள்.

அங்கே இரகசியமாகச் செயற்படும் ரொட்டேரியன்களும் இருக்கலாம். எவ்வாறாயினும் ஒரு சமூகத்தில் தமது இனத்துக்கு உதவுவதற்காக தம்மை அர்ப்பணித்துள்ளவர்களை ஒரு சமூகமாக ஒரு குழுவாக இணைத்துள்ளீர்கள். போலியோவை ஒழிப்பதற்காக மிகச் சிறந்த பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

இங்கே இலங்கையர் மட்டுமன்றி இந்தியா, மாலைதீவு, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ரொட்டேரியன்கள் உள்ளனர். நீங்கள் அனைவரும் பிரிவினைகளைக் களைந்து, உலகை மிகச் சிறந்த நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற ஓர் இலக்கை அடைவதற்காக செயற்படுகின்றீர்கள். நீங்கள் உலகம் முழுவதும் முன்னெடுத்து வரும் பணிகளுக்காக நன்றிகள்."
என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.









# தமிழ்மக்களை முட்டாளாக்கும் செயற்பாட்டில் நாட்டின் அரசு!

## சிவாஜி குற்றச்சாட்டு

ஐ.நா. கூட்டத்தொடரில் தீர்க்கமான முடிவுகளை எட்டாமல், அதனை சமாளிக்கும் வகையிலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவுமே தமிழ் தரப்புகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சு மேற்கொள்வதாக எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறு தொடர்ந்தும் பேச்சு வார்த்தையிலே ஈடுபட்டுக் கொண்டிருப்போமானால் நமது இனம் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படும் என எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

சமகாலநிலைவரம் தொடர்பாக வல்வெட்டித்துறையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்துக்குள் தீர்வு தரப் போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் தமிழ் தரப்புகள் தற்போதும் மௌனமாக இருந்தால் நிலைமை மோசமாகிவிடும் எனக் கூறியுள்ளார்.

ஆகவே, பொதுசன வாக்கெடுப்பை கோரி அதன் மூலம் தீர்வை அடைய முயற்சிக்கவேண்டும் என்றும் அதற்கு வெளிநாட்டு மத்தியஸ்தம் அவசியம் என்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை சிங்கள தரப்புக்கு பலதடவைகள் கூறப்பட்டுள்ள போதும் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை என அரசாங்கம் கோருகின்றமை தமிழ் மக்களை முட்டாளாக்கும் செயற்பாடு என்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.



# பாணின் விலை இன்று குறைகிறது!

இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் அமுலாகும் வகையில் ஒரு இறாத்தல் (450 கிராம்) பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கோதுமைமாவின் விலை குறைப்பு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# காணியை விடுவிக்கக்கோரி கவனவீர்ப்புப் போராட்டம்!

## முல்லையில் நேற்று நடந்தது

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் அமைந்துள்ள மாவீரர்களின் மயானம் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியை இராணுவத்தினரும் மற்றும் ஒரு பகுதியை தனியார் ஒருவரும் ஆக்கிரமித்துள்ளனர்.

இதில் குறித்த தனியார் ஆக்கிரமித்துள்ள காணியை விடுவிக்கக்கோரி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அனந்தி சசிதரன் தலைமையில் 4 பஸ்களில் சுமார் 400 பேர் வரையில் அந்த இடத்துக்கு வருகைதந்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இரு தரப்பிற்கும் இடையில் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றங்களை அடுத்து அந்தப் பகுதியில் புதைகுளி அமைந்துள்ள பகுதியை விடுவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.





# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 18th of December 2022



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


**Read the following passage and Answer: the question that follows.**



## The Golden Girl

Ever since she burst into the scene by making it to the 1980 Moscow Olympics as a 16 – year old, P. T. Usha's tall deeds have exemplified Indian sporting excellence. The spirit queen was so consistent for over a decade that she was truly the flag bearer who helped countrymen live the dream of a rare sporting excellence in the international arena.

Hailing from a remote village called Payyoli, Usha became an icon for sport lovers.

She made the nation swell with pride, every time she stepped on to the track. She gave unalloyed joy to her fAnswer: when she became the first Indian woman to make it to Olympic final.

Usha's greatest moment was also the most shattering in her life as she was pushed to the fourth place in the 400 meters hurdles final at the 1984 Los Angeles Olympics. The Romanian Christina Cojocaru won the bronze medal. Usha lost by an agonising l/100th of a second. But every Indian household acknowledge the sense of achievement, though it fell short of India's first Olympic medal from the track. Several girls born during the 1980s were named after the golden girl. It served as an eloquent testimony to the love and affection many people had for Usha.

Usha's reign as the Asian sprint queen was highlighted by her snapping up five gold medals and a bronze at the 1985 Jakarta Asian track and field meet followed by a sensational four gold medals and one silver haul at the Seoul Asian Games the following year.

***Answer the following questions.***

a. When did Usha capture the imagination of the entire nation?

______________________

b. How did she hefp her countrymen five the dream of a rare sporting excellence?

______________________

c. Why were many girls in the mid 80s named after Usha?

______________________

d. What was the most shattering moment in the life of Usha?

______________________

## Airplanes

Airplanes have the reputation of being dangerous and even hardened travellers are intimidated by them. They also have the grave disadvantage of being the most expensive form of transport but nothing can match them for speed and comfort, travelling at a height of 30,000 feet, far above the clouds, and at over 500 miles an hour is an exMlarating experience. You do not have to devise ways of taking your mind off the journey, for an airplane gets you to your destination rapidly.

For a few hours, you settle back in a deep armchair to enjoy the flight. The real escapist can watch a free film show and sip a hot or cold drink on some services. But even when such refreshments are not available, there is plenty to keep you occupied. An airplane offers you an unusual breathtaking view of the world. You soar effortlessly over high mountains and deep valleys. You really see the shape of the land.

If the landscape is hidden from view, you can enjoy the extraordinary sight of unbroken clouds, plains that stretch out for miles before your while the sun shines brilliantly in a clear sky. The journey is so smooth that there is nothing to prevent you from reading or sleeping. However you decide to spend your time, one thing is certain: you will arrive at your destination fresh and uncrumpled. You will not have to spend the next few days recovering from a long and arduous journey.

**1. The main disadvantage of an air journey is that:**
(a) it is very dangerous
(b) it is very expensive
(c) it is very boring
(d) it is a fearsome experience

**2. The best advantage of air journey is that:**
(a) you can watch a free film
(b) you can sip hot coffee or tea
(c) you can watch clouds
(d) you don't feel tired after the journey



**3. Pick out the incorrect statement.**
(a) an airplane moves at more than 5oo miles an hour speed
(b) one arrives crumpled at the destination after air journey
(C) one can easily read or sleep during air journey
(d) one can see the shape of land from an aeroplane

**4. How can one keep oneself busy during air journey**
(a) by watching movie
(b) by enjoying the beautiful sights outside
(c) by reading and sleeping
(d) all the above

**5. Which of the following is a synonym for intimidated**
(a) terrified
(b) excited
(c) bored
(d) none of above

**6. The exhilarating experience that the author talks about is**
(a) travelling at a height of
(b) travelling above the clouds
(c) travelling at a speed of more than 500 miles an hour
(d) all the above

**7. After an airplane journey, you do not have to spend time recovering because:**
(a) it has been a long and arduous journey
(b) you travelled above the clouds
(c) you feel fresh and uncrumpled
(d) you spent time reading books or sipping coffee

"konwledge isn't free. You have to pay attention"

# Read the following passage and answer the questions that follow.



1. Without oil the modern world could not exist. Oil is needed for travel, because it powers our motor cars, buses, trains, aeroplanes and ships. Oil helps machines of all kinds, to run easily. Oil also gives us other substances, such as artificial rubber, artificial materials for clothing, and new materials for making things. Yet till a hundred years ago no one used oil for any of these purposes. In fact, no one knew that much oil existed.

2. Men do not make oil; they find it. They look for oil in many ways. They begin by making a map of the land where they are searching. Then they use the map to help them in choosing a site to explore with more care. They start their work by examining the rock from under the surface and come to know whether oil is likely to be underneath the rock.

3. To find out how deeply the oil is buried they need to know how far under the surface the rock is. If everything seems hopeful the men decide to drill down through the rock. In this way they find out whether oil really does lie underneath it. Often this test – well, as it is called, is far away from any town and there is much work to do before any drilling starts. Houses and roads must be built for the people coming to drill the test – well. Then the big derrick that carries the drill must be put up. This derrick is a strong framework of steel about 45 meters high. The drill is raised and lowered from inside the derrick.

4. Drilling for oil often means making a well that goes very deep into the earth. Such deep wells have never been made until modern times. The rate of drilling depends upon the kind of rock being drilled: it can be as fast as 60 meters an hour. Drilling is usually done on dry land, but we can also drill the rock under lakes or seas by putting the derrick on a special platform above the water.

1. How is oil useful to machines? ________
2. How do men go about looking for oil? ________
3. Drilling for oil often means ________
4. The rate of drilling depends upon ________
5. Drilling is usually done on ________
6. To find out how deeply the oil is buried we need to ________
7. Find the words from the passage which mean:
   a. make a hole (para 3)
   b. a kind of crane with a movable pivoted arm. (para 3)

---



There was a strong breeze, which is unusual during a winter night in Gujarat. The sugarcane swayed wildly under a moonless sky. I pulled my jacked around me and adjusted my binoculars.

"You won't need them. It will come right down there, next to the cow," village leader Hitesh Patel whispered in my ears. I felt like asking him if it was safe on the roof where we were perched, but then Vitthal Vasava signaled from the cow shed below. "It seems to be coming from the riverside," he said. "You will see it any moment. Stay still and don't make any noise or you'll invite trouble [9]," Hitesh reminded me. Another couple of minutes passed, and then a leopard leaped out from behind the shed and made its way towards a cow that was chained to a tree nearby.

As the leopard closed to within ten metres, it seemed there would be no escape for the cow. However, what I saw was something else – totally baffling. As if enacting a character from Rudyard Kipling's Jungle Book, the cat ducked under the cow's neck, stretched out lazily and began to purr. At first the cow ignored its companion but eventually gave in to the feline's playful nudges[16] and started licking its fur as if it was one of its calves. It started pushing the cow's belly and after a while, crept under her neck and lay there as if resting. Then it stood up and slowly walked back to the riverside.

What could have caused this extraordinary behaviour[20]? It turned out that, about three years ago, a female leopard had given birth to two cubs in a sugarcane field. The villagers had spotted the family and had brought it to the Noticeof the forest officials. A few months later, a female leopard was captured in the area and taken to the zoo. There was no report of the cubs. The people believed the leopard that has been frequenting the village every night and playing with the cow might be one of the two cubs. "It's possible that this leopard cub would have seen the cow, and became imprinted on it," Hitesh Patel sug gested.

**1. What were the men doing on the roof?**
(a) They were enjoying the winter night in Gujarat
(b) They wanted to have a good view of Vitthal Vasava
(c) They wanted to keep a safe distance from the leopard.
(d) They wanted to look at the leopard from a safe distance.
Answer:
(d) They wanted to look at the leopard from a safe distance.

**2. What kind of "trouble" (line 9) was Hitesh referring to?**
(a) The men falling from the roof
(b) The leopard attacking the cow
(c) The men being attacked by the leopard
(d) The leopard ducking under the cow's neck.

**3. Why was the writer puzzled?**
(a) The leopard purred like a cat
(b) The leopard did not kill the cow
(c) The cow licked the leopard's fur
(d) The leopard pushed the cow's belly

**4. What was the cow's reaction to the leopard's "playful nudges" in line 16?**
(a) The cow was loving
(b) The cow was pleased
(c) The cow was irritated
(d) The cow was terrified
Answer:

**5. What do you think caused the leopard to behave in such an "extraordinary behavior"?**
(a) The leopard had seen the cow before.
(b) The leopard enjoyed playing with the cow
(c) The leopard treated the cow like its own kind Boere:
(d) The leopard had been frequenting the village every night.

# Essay on My Favourite Game Football



In this article, read an essay on my favourite game football for students and children in 1000+ words. It includes history, rules, structure, importance of the sport of football.

The game football serves as a very crucial part of human being health. It keeps people fit. Further, it keeps them away from various diseases. So, having some physical hobby is must necessary for them.

Crucially, many doctors and nutritionists recommend playing this amazing game. Kids play so many games like football, basket, cricket, hockey, badminton, tennis, and many more. Since in India, the popular game is cricket, many kids keep it as their hobby. But, for me my favourite sport is football.



### About My Favourite Game Football

Football is one of the most famous games in the world. It is played in almost over 100 countries. It is an outdoor sport played between two teams. Each of these teams has 11 members. The field is rectangular and has a goal post on each end.

The prime goal of football game is to score a goal against the opponent team. The team that scores the max number of goals against the other wins the match. As the name suggests, the player plays this game by kicking the ball with their foot. Also, the other name given to this game is "Soccer."

Football is an extremely popular game that attracts people all throughout the world. It helps many to get relief from stress, teaches teamwork, discipline, and also brings fitness to the fans and players. It is a game of much wonder, joy, and interest.



### History of Football Game

Football is said to be an ancient Greek game known as "Harpaston." It was played be kicking a ball with foot by two teams. It was a rough game aimed to score a goal by kicking or running the ball past the goal line.

It was played with no particular side boundaries, the number of players, limits filed to size, and many more. It is said that it had its origin in twelfth. Later on, football became famous in England first, and then its rules came into effect when it became a leading sport in institutions in the 19th century.

Further, it was spread to the US but was mostly banned in schools because of the increasing brutality. But it got legalised by the committee in 1905.

### How to Play Football Game?

Football is a famous sport that keeps players disciplined and healthy. It develops their team spirit, sense of tolerance, and mind among them. It is played for 90 mins in two halves of 45 mins, and 15 mins break.

This game has two teams of 11 players in each. Here, players have to kick a ball with their feet and take a goal by putting the ball into the goal post of the opponent team. In order to oppose the goal made of players of the opponent team, there is a goal-keeper on both sides.

Players are prevented to touch the ball with hand except for the goalkeeper. A team having more goals is declared as the winner and the other as a loser. The game football is conducted by two linesmen, one on each side and by a referee.

All the players are warned to follow the rule while playing strictly. It has been an international game & played as a World Cup tournament every four years in various countries throughout the world.

### Rules in Game Football

Similar to other games, there are some rules and regulations in a football match. First, the ball shouldn't be touched by hand. If the ball gets touched, the other team gets a free-kick.

There is a small area near the goalpost. 'D' is the game of that area. The boundary of 'D' is at least 10 yards from the goalpost. If a player touches the ball, they're the opposite team gets a penalty.

Further, there are other rules. The second crucial rule is the "offside rule." In this rule; when the player crosses the defender line, it becomes the off-side. If you are a great fan of football, you must know what defenders are.

In this sport, the players are into three subcategories. The first category is "Forward." These are players who put the ball in the goalpost's net. The 2nd category is a "Midfielder."

They pass the ball to the forward player. The 3rd category is the "Defenders." The defenders stop the other team players from putting the ball in the goalpost.

Apart from this, if a player injures and fouls the other team player, the referee gives him a "Yellow" or "Red Card." The yellow card is a warning card, and the red card is a suspension card. This card suspends the play for the rest of the football game.

Like said earlier, sports person plays the game in a rectangular field. Here, the length of the area is 110m, and the breadth is 75m long. There are lines marked in the field known as yards; the centre line is the 50-yard line and the line near the goal post in the 10-yard line.

Each team comprises 2 center forward players, one right out and one left out, 4 back players and 2 halfback players, and a goalie. Here, the players are prevented from touching the ball with hand… Only a goalie can do so.

### Why football is My favorite Game?

For me, football is my all favourite time game. It has been the source of immense enjoyment and excitement for both my family and me. I played for my school's football team on the attacking side and felt a rush in my veins whenever I take the ball forward to the opponent's goalpost.

(see page 12)

# Essay on My Favourite ....

When I scored a goal, all my teammates will come cheering me. I have always watched football, and Christino Ronaldo is my favourite player. He plays as a forward player and is indeed the greatest of all times.

Certainly, he is the best player the world has known in football. I watch all his matches, and he is my role model. I even try to imitate his moved while playing.

### *Importance of Playing Football Game*

Soccer has also been a source of great physical activity. As it is played for 90 mins with a break of 15 mins after 45 mins, it is a game that keeps a person running around the field all the 90 minutes.

So, a 90 mins cardio workout will surely keep people fit and immune to diseases. Playing football is refreshing to the body. And the best part is that it is a team game, so you will find a feeling of effort and team building. Working in teams will surely help one in the future.

If you play soccer regularly, it will render so many benefits like improving fitness skills, enhancing concentration level, psychosocial benefits, increasing aerobic and anaerobic fitness, and so forth. It benefits people of all age groups.

Some of the important advantages of playing football game are–

- Football game makes a person punctual, calm and disciplined
- The game improves cardiovascular health & engages the cardiovascular system
- It motivates players for teamwork.
- Football improves the level of fitness skills
- It helps improve health habits, muscle strength, gain lean muscle, lose more body fat throughout life.

The game football improves mental and physical strength

- It provides social and psychological benefits by helping players deal with disappointment and practice good fair play.
- Football game improves confidence level self-esteem by quick-thinking & developing adaptability
- Reduces depression by developing positive attitudes

### *Conclusion*

Football, throughout the sport, represents life. Strive hard to succeed and must know how to work and team up with others as in football; it is only the team spirit that will lead you to play and win against the opponent.

In life, you keep running behind a goal and score one. So, children and kids must be promoted to play soccer at schools and home to get fit mentally and physically. Hope you liked this essay on my favourite game football.

# Corporates must be Triple Bottom Line driven Rotary Global Head Jennifer Jones









The first Woman Rotary Global President Jennifer Jones called on all Sri Lanka Corporates to be focused not only on profit or bottom lines but also in the triple bottom line metrics of social, environmental and financial results even though the country is experiencing its toughest economic climates in history.

Addressing top corporates at the Colombo Stock Exchange in the presence of Senior officers of the Colombo Stock Exchange, Ms. Jones said, “Let’s begin with environmental sustainability and I commend the challenging One Million Tree project that Rotary Sri Lanka has embarked on which will benefit people, profit and planet too.”

Jennifer Jones rang the Opening Bell at the Stock Exchange in keeping with the tradition of market opening ceremonies to mark important events.

The Chairman of the CSE Dilshan Wirasekera appealed to corporates to partner Rotary in this novel initiative and thereby ensure that the country could be protected from environmental disasters.

Chair of the One Million Trees Trust, Gowri Rajan noted that the Rotary One Million Tree project was a unique programme as trees are planted in a dedicated area in the Nuwara Eliya district and they are nurtured carefully by experts in the field and there is full transparency and accountability as figures are audited annually. Ms Rajan also noted that everyone has a favourite tree in their life - we want to know your tree story she said.

Explaining Rotary Sri Lanka’s service, District Governor Pubudu De Soyza stated that in Sri Lanka over a two hundred billion rupees worth of projects have been implemented for the benefit of all communities.

Rotary has a seat in the UN General Assembly of the United Nations and it is the largest non-government Foundation providing education and humanitarian aid.





# ஈழ நாட்டின் யாழ்ப்பாண இராச்சியத்தின் சங்கிலிய மன்னன் வரலாறு



சங்கிலியன் அல்லது முதலாம் சங்கிலி அல்லது ஏழாம் செகராசசேகரன் என்பவன் 1519 தொடக்கம் 1561வரை யாழ்ப்பாண அரசை ஆண்ட அரசன் ஆவான். போத்துக்கேயருடைய குறிப்புக்கள் இவனை ஒரு கொடூரமான அரசனாகக் காட்டுகின்றன. இறுதிவரை பல வழிகளிலும் யாழ்ப்பாணத்துக்குள் புக முயன்ற போத்துக்கேயரைத் துணிந்து எதிர்த்து நின்றவன்.

போத்துக்கேயருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஒல்லாந்தரின் சங்கிலியைப் பற்றிய குறிப்பு ஒன்றில் அவனைச் சியங்கேரி என்னும் பெயரால் குறித்துள்ளனர். இக்குறிப்பில் இவ்வரசன் 42 ஆண்டுகளுக்கு மேல் யாழ்ப்பாணத்தை ஆண்டதாகவும், பின்னர் போத்துக்கீசர் அவனது அரசாட்சியை அழித்துவிட்டு 97 ஆண்டுகள் ஆண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாக வைத்தே சுவாமி ஞானப்பிரகாசர் சங்கிலி ஆட்சி 1519 ஆண்டிலிருந்து 1561 வரை இருந்ததாகக் கணித்துள்ளார்.

சங்கிலியனின் ஆட்சி எவ்வாறு முடிவுற்றது என்பதில் தெளிவில்லை. இவன் மக்களால் அகற்றப்பட்டதாகப் போத்துக்கேயப் பாதிரியாரான குவைறோஸ் குறிப்பிட்டுள்ளார். மக்கள் கலகம் செய்து சங்கிலியை அகற்றிவிட்டு அவனது மகனான புவிராச பண்டாரத்தை அரசனாக்கினர் என்றும், புவிராசன் ஆண்மையற்றவனாய் இருந்தமையால் சங்கிலியே ஆட்சியை நடத்தி வந்தான் எனவும் செ. இராசநாயகம் கூறுகிறார். இவரது கூற்றுப் படி சங்கிலி 1565 ஆம் ஆண்டு காலமானான்.

செங்கை ஆழியான் மாமன்னன் சங்கிலியன் எனும் புத்தகத்தின் ஆசிரியர் பின்னுரை) யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதிமன்னன் சங்கிலி செகராசசேகரன் என்று கொள்ளப்படுவதற்குக் காரணம் இந்த இராசதானியை ஆண்ட இன்னொரு சங்கிலிகுமாரனின் கதையையும் இணைத்தமையாகும். யாழ்ப்பாணத்தை ஆண்ட முதலாவது சங்கிலி இந்த நாட்டின் இறுதி மன்னனல்லன். அவன் அரசனான வழி தவறாயினும், நாட்டை நன்கு பரிபாலனம் செய்தவன். மாவீரன். கடைசி வரை நாடு அந்நியர் வசமாகாது பாதுகாத்தவன். பிரகன்சாவுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைப்படி நடந்த கொள்ளவில்லை. திறைசெலுத்தவில்லை. ஆனால் இந்த அரசின் இறுதிக் கொழுந்தல்லன். பட்டத்து இளவரசனும் அவன் மனைவியும் போர்த்துக்கேயரால் கோவைக்குக் கொண்டு செல்லப்பட்டு மதம் மாற்றப்பட்டு இறந்தனர். போர்த்துக்கேயரால் கொண்டு செல்லப்பட்ட புத்ததந்த தாது பலர் வேண்டியும் கவனத்தில் கொள்ளப்படாது மூட நம்பிக்கையை வளர்க்கும் என்பதால் பொடி செய்யப்பட்டு கடலில் கரைக்கப்பட்டது.

1515 முதல் 1565 வரை இந்த நாட்டை சங்கிலி ஆண்டான். அவன் முடிவு எவ்வாறாயிற்று என்று தெரியாதாயினும் அவன், பின்னர் ஐந்து மன்னர்கள் இந்த நாட்டை ஆண்டுள்ளனர். அவர்கள் காசிநயினார், பெரியபிள்ளை, புவிராஜசிங்கன், எதிர்மன்னசிங்கன், சங்கிலிகுமாரன் என்போராவர். பெரியபிள்ளை யாழ்ப்பாணத்தின் அரசனாக இருந்தபோது திறை செலுத்தப்பட்டது. பரநிருபசிங்கர், பரராசசிங்கன், வன்னி இளவரசன் ஆகிய மூவரும் கோவையில் மதம் மாறி இடையில் மரித்தார்கள். அதனால் அரசாளும் சந்தர்ப்பத்தை இழந்தார்கள். 1584 இல் மன்னனாகிய புவிராஜபண்டாரன் போர்த்துக்கேயருக்கு எதிராக மன்னாருக்குப் படையெடுத்தான்.

1591 இல் அந்திரே பூர்த்தாடு தேமொண்டென்சா எனு குல் கப்பித்தான் பெரும் படையுடன் சென்று புவிராஜனின் தலையைக் கொய்தான். அதன் பின்னர் எதிர்மன்னசிங்கன் அரசனான். அதன் பின்னர் சங்கிலி குமாரன் என்பவன் மன்னனானான். இவன் கொடுங்கோலன் என மக்கள் முறையிட்டதால் போர்த்துக்கேயர் இவனைப் பிடித்து கோவைக்கு அனுப்பிச் சிரச்சேதம் செய்தனர். 1620 இல் பிலிப் தே ஒலிவேறா என்ற போர்த்துக்கேயன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி தானே நிர்வாகியானான். போர்த்துக்கேயர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை முதன்முதல் இழந்தது.

## கல்விக்கதிர்



- அகரன் -

# பழமொழிகளும் அதன் விளக்கங்களும்

**1. கொடுக்குறதோ உழக்குப்பால், உதைக்கிறதோ பல்லுப்போக.**

விளக்கம் – ஒரு உழக்கு என்பது கால் படி. கொஞ்சமே கூலி கொடுத்து அளவில்லாமல் வேலை வாங்கும் ஒரு கஞ்சத்தனமான எஜமானைக் குறித்து அவன் வேலையாள் சொன்னது தான் இந்த பழமொழி.

**2. சாஸ்திரம் பொய் என்றால் கிரகணத்தைப் பார்.**

விளக்கம் – சாஸ்த்திரங்களில் கணிக்கப்பட்டுள்ள நாள் – நாழிகளின்படி கிரகணங்கள் தவறாது நிகழ்வது, சாஸ்த்திரங்களின் உண்மைக்குச் சான்று.

ஜோதிடம் என்பது ஆறு வேதங்களில் ஒன்றாகி வேதத்தை விளக்குவதால், அது சுருதி ஸ்தானத்தைப் பெறுகிறது என்பது இதன் உண்மை விளக்கம் ஆகும்.

**3. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.**

விளக்கம் – நம்முடைய மனம் நமக்குள் இருந்து எப்போதும் நம்முடன் உறவாடிக் கொண்டிருந்தாலும், அதன் குற்றங்கள் நமக்குத் தெரிவதில்லை.

அதுபோல, தன் குற்றம் கண்ணுக்குத் தோன்றாது. தன் முதுகு தனக்குத் தெரியாது. இதுவே இதன் உண்மை விளக்கம் ஆகும்.

**4. கழுதைக்குப் பரதேசம் குட்டிச்சுவர்.**

விளக்கம் – குறுகிய குறிக்கோள்களில் திருப்தி காண்பவர்களை குறித்துச் சொன்னது இந்த பழமொழி. இதுவே இதன் உண்மை விளக்கம் ஆகும்.

**5. ஒரு குருவி இரை எடுக்க, ஒன்பது குருவி வாய் திறக்க.**

விளக்கம் – நிறையக் குழந்தைகள் உள்ள குடும்பத்தில் தந்தை தன் ஊதியத்தால் தனக்கு ஒன்றுமே பயனில்லை என்று நொந்து கூறியது தான் இந்த பழமொழி.

இதுவே இதன் உண்மை விளக்கம் ஆகும்.

**6. கை காய்த்தால் கமுகு (பாக்கு) காய்க்கும்.**

விளக்கம் – விடாமுயற்சி வெற்றி தருவது மட்டுமல்ல, அந்த விடாமுயற்சிக்கு மிகுந்த உடல்வலிமை, மனவலிமை வேண்டும் என்பது தான் இந்த பழமொழியின் உண்மையான விளக்கம் ஆகும்.

**7. உங்கள் உறவிலே வேகிறதைவிட, ஒரு கட்டு விறகில் வேகிறது மேல்.**

விளக்கம் – மிகுந்த உரிமைகள் எடுத்துக் கொண்டு செலவும் துன்பமும் வைக்கும் சுற்றமும் நட்பும் மரணத்தில் உடல் நெருப்பில் வேகுவதை விடத் தாளமுடியாதது என்பதே இதன் உண்மையான விளக்கம் ஆகும்.

**8. வீடு வெறும் வீடு, வேலூர் அதிகாரம்.**

விளக்கம் – வீட்டுச் செலவுகளுக்குக் கொஞ்சம் பணமே கொடுப்பது வழக்கமாக இருக்க, விருந்துணவு கேட்டு அதிகாரம் செய்யும் கணவன் குறித்து மனைவி சொன்னது தான் இந்த பழமொழி.

இதுவே இதன் உண்மை விளக்கம் ஆகும்.

**9. நேற்று வெட்டின கிணற்றிலே முந்தாநாள் வந்த முதலை போல.**

விளக்கம் – சமீபத்தில் தெரிந்து கொண்டதை ரொம்பநாள் தெரிந்தவன் போலப் பேசும் ஒருவருக்காக கூறுவது தான் இந்த பழமொழி. இதுவே இதன் உண்மை விளக்கம் ஆகும்.

**10. ஒண்டிக்காரன் பிழைப்பும் வண்டிக்காரன் பிழைப்பும் ஒன்று**

விளக்கம் – இருவருமே நிலையாக ஒரு இடத்தில் தங்க மாட்டார்கள் என்பது தான் இத உண்மை விளக்கம் ஆகும்.

# இவை தெரிந்தால் முன்னேறலாம்

அனைத்து தவறுகளுக்கும் முக்கியக் காரணம் தற்பெருமைதான். அதனால் தற்பெருமை பேசுவதை உடனே நிறுத்துங்கள்.

பிறர் துன்பங்களைக் கேட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறுங்கள். உங்கள் துன்பங்களை உங்களிடமே வைத்திருங்கள்.

பெண்ணின் இதயம் அவளுடைய உதடுகளில் இருக்கிறது. ஆனால், அவளுடைய ஆன்மாவோ அவளுடைய கண்களில் இருக்கிறது.

கொடுப்பது நல்ல விஷயம்தான். நீங்கள் தாராளமாகக் கொடுக்கலாம், யாருக்கும் கொடுக்கலாம். ஆனால் தற்பெருமைக்காகக் கொடுப்பதற்கும், மனதின் மகிழ்ச்சிக்காகக் கொடுப்பதற்கும் வேறுபாடு உண்டு.

உங்கள் மனம் புத்திக் கூர்மையும் தந்திரமும் கொண்டது. உங்களுக்கு ஒன்றில் சலிப்பேற்பட்டதும் இன்னொன்றை அது நாடச் செய்யும்.

பிச்சை இடுபவனைக் காட்டிலும் அருவருக்கத் தக்கவன் யாரும் இல்லை. பிச்சை எடுப்பவனைக் காட்டிலும் பரிதாபத்துக்கு உரியவன் யாரும் இல்லை.

உங்களுடைய வெறுப்பினால் நீங்கள் என்னை கொன்று புதைக்கலாம். ஆனால், காற்றைப் போல நான் மீண்டும் எழுந்து வருவேன்.

உங்களுக்கு ஏதாவது பிடிக்கவில்லையெனில், அதனை மாற்றுங்கள். அப்படி மாற்ற இயலவில்லையெனில், உங்கள் மனோபாவத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.


உடை உடுத்துவதில் கவனக்குறைவாக இருக்கலாம். ஆனால் நேர்மையைக் கடைப்பிடிப்பதில் கவனக் குறைவு கூடாது.

உன் முயற்சிகளை ஏளனம் செய்வோரிடமிருந்து விலகியே இரு. சிறியோரே அவ்வாறு செய்வர் மாறாக, உண்மையான பெரியோரோ உன்னாலும் முடியும் என்று உன்னை உணர வைப்பர்.

எந்தப் பழக்கத்தையும் ஜன்னல் வழியாகத் தூக்கி எறிந்துவிட முடியாது. கையைப் பிடித்துப் படிப்படியாக இறக்கி அழைத்துப்போய்தான் வெளியேற்ற வேண்டும்.

எத்தனை வள்ளல்கள் வாழ்ந்தும் வறுமையை ஒழிக்க முடியவில்லை, ஒரு நல்ல அரசாங்கம் ஏற்பட்டால் வள்ளல்கள் தேவை இல்லை.

# ‘ஒரு விளக்கு வெளிச்சம்’ நூல் அறிமுகம்



பனையோலைக் குடிசைக்குள் ஒரு விளக்கு வெளிச்சம் என்ற கவிதை நூலின் ஆசிரியர் நீ.நிலவிந்தன் ஆவார். வவுனியா கனகராயன் குளத்தைச் சேர்ந்த இவர் கவிதைகள், சிறுகதைகள் என பல படைப்புக்களை எழுதி வளர்ந்து வரும் இளம் கவிஞராக தடம் பதித்துள்ளார்.

அந்தவகையில் விளக்கு வெளிச்சம் எனும் கவிதை நூலானது இவரது முதல் படைப்பாகும். சில தசாப்தங்களுக்கு முன் இடம் பெற்ற யுத்தமும் அதனால் ஏற்பட்ட அவலங்களுக்கிடையிலும் வாழ்ந்து பல இழப்புக்களை அனுபவித்த இவர் அதன் ஆறாத வடுவினை தனது கவிதை நூலின் மூலம் புலப்படுத்தியிருக்கிறார்.

இலங்கையில் இடம் பெற்ற இரண்டு இனங்களுக்கிடையிலான போரில் பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் அவலங்களை பறைசாற்றியதோடு மட்டும் நின்று விடாது அவற்றிற்கான நீதியினையும் மறைமுகமாக வெளிப்படுத்தியிருப்பதையும் இவரது கவிதைகளின் மூலம் காணலாம். மேலும் தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்வும் இந்நூலில் பிரதிபலித்து நிற்கின்றது.

போரினை மையப்படுத்தி எழுந்த இவரது கவிதைகள் யாவும் துன்பியல் உணர்வினை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

காடையர்களின் கைகளுக்கு
தன் மார்புகளை கையளித்து விட்டு
அவள் போகிறாள்.

அம்மணத்தைக் காக்கத் தவறிய
உள்ளாடைகள் யாருக்கும் பயனற்று
கிழிந்து மண்ணில் புதைந்து கிடந்தன

என்ற இவ்வரிகளினூடாக பெண்களுக்கு நடந்த வன்கொடுமைகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இதில் அம்மணத்தைக் காக்கத் தவறிய உள்ளாடைகள்.. என்பதில் ஒரு பெண்ணின் அம்மணத்தைக் காக்க உள்ளாடைகள் மட்டும்தானா பயன்படுகின்றன என்ற ஒரு கேள்வியும் என்னுள் எழுந்தது. அதுமட்டுமல்லாது ஆண்களும் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டிருப்பதனையும் அவர்களது அங்கங்களும் ஆடைகளும் புதையுண்டிருப்பதனையும், அவர்களது கற்பும் நிர்வாணமாக்கப்பட்டிருப்பதனையும் நான் பல காணொளி புகைப்படங்கள் வாயிலாகக் காண்டுள்ளோம். அந்தவகையில் இரு பால் அமைப்பில் தனது கவிதைகளில் வெளிப்படுத்தியிருக்கலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது.

சிறந்த கவிதையமைப்பினைக் கொண்டு தனக்கேற்ற சுயபாணியில் கவிதைகள் எழுதப்பட்டிருப்பினும் ஓரிரு கவிதைகள் பாரதியாரின் கவிதைச் சாயலில் பிரதிபலித்திருப்பதை காணக் கூடியதாகவுள்ளது. ஆறியும் மாறாத யுத்த வலியினையும், ஈழத்தமிழ் உணர்வும் அதனை வெளிப்படுத்த பயன்படுத்திய வார்த்தைகள், கவி சொற்பிரயோகங்கள், சொற்கோர்வைகள், இயற்கை வர்ணனைகளும் கவிதைகளுக்கு அழகு சேர்த்துள்ளன.

போர் பற்றிய செய்திகள் பல்வேறு இலக்கியங்கள் வெளிவந்திருப்பினும் அல்லது பதிவு செய்திருப்பினும் அதனுடைய ரீங்காரங்கள் ஓய்ந்த பின் பதின்மூன்று வருடங்கள் கழித்து மீண்டும் போர் தொடர்பான செய்திகளை இன்றைய தலைமுறையினர்களும் புரிந்து கொள்ளும் ஒரு ஆவணப் புத்தகமாகக் கையளித்துள்ளமை ஒரு நிமிடம் ஈழ வரலாற்றை திரும்பிப் பார்க்க வைக்கிறது. இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பார்.

அந்தவகையில் இந்நூலினை ஓர் வாசகியாக எனது பார்வையில் நோக்கினால் காலத்தின் தேவை கருதிய படைப்பின் வழியிலிருந்து சற்று விலகியுள்ளதை ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. போரின் மூலம் பல்லாயிரக் கணக்கான உயிர்களை இழந்து விட்டோம். இப்போர் மீண்டும் இடம் பெறக் கூடாது என்ற மனநிலை ஒவ்வொரு பிரஜைகளின் மனதிலும் ஆழமாகப் பதிந்து விட்டது. இருப்பினும் இந்நூலின் மூலமாக ஏற்படும் மன உணர்வு ஒரு வாசகனின் மன உணர்வினை அசைத்துப் பார்க்காமலிருக்க வேண்டும் என்பது எனது கருத்தாகவுமுள்ளது. மீண்டும் வன்மம், கோபம், பகை, ஆயுத போராட்டம் போன்ற உணர்வுகளிலிருந்து மக்களின் சிந்தனை விலக வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகவுமுள்ளது. தனது கவித்திறனை கவிதைகளாகப் பிழிந்து கவிதை கோர்த்து தந்து முதல் வெளியீடாக்கியமை பாராட்டுக்குரிய தாகும். ஒரு விளக்கு வெளிச்சம் எனும் இக்கவிதை நூல் வரிகள் ஒவ்வொன்றும் வாசகர்களின் மனதைக் கவர்ந்து இலக்கியத்தின் கைகளில் நண்பர் நிலவிந்தனின் படைப்புக்கள் சென்றடைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

- க.மங்களேஸ்வரி -

# கம்பனின் சிறப்பு

## கலைக் கதிர்





கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும் என்றொரு பழமொழியே உருவாகும் அளவிற்கு, கம்பரது எழுத்தும் புகழும், கவித்திறமையும் அனைவராலும் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. ‘கவிபேரரசர் கம்பர்’, ‘கவிச்சக்ரவர்த்தி கம்பர்’, ‘கல்வியில் பெரியவர் கம்பர்’ என்றெல்லாம் அவரது கவித்திறனை பறைசாற்றும் அளவிற்கு அவருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியில் சொல்வன்மைக் கொண்டவராக இருந்த அவர், ஆழமான கவிதை அனுபவமும், கற்பனை ஆற்றலும், புலமைதிறனும் பெற்று, அவரது சமகாலத்து புலவர்களான ஒட்டக் கூத்தர், சேக்கிழார் போன்றோரின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

‘கம்பராமாயணம்’, ‘சிலையெழுபது’, ‘சடகோபர் அந்தாதி’, ‘சரசுவதி அந்தாதி’, ‘திருக்கை வழக்கம்’, ‘ஏரெழுபது’ மற்றும் ‘மும்மணிக்கோவை’ போன்றவை அவர் படைத்த படைப்புகளாகும்.

இதில், ‘கம்பராமாயணம்’, தமிழ் இலக்கியத்தில் தலைச்சிறந்த காவியமாக கருதப்படுகிறது.

மேலும், கம்பரின் தனித்துவமான சுவைக்கினிய பாணியில் அதை படைத்ததால், அது உலகளாவிய அங்கீகாரம் பெற்றது எனலாம்.

ஒரு சிறந்த தமிழ் எழுத்தாளர், அறிஞர், கவிஞர், நாடக ஆசிரியர், என்று பன்முகம் கொண்டு விளங்கிய கம்பர் அவர்கள், கிபி 12 ஆம் நூற்றாண்டில், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவழுந்தூர் என்னும் இடத்தில் ஆதித்தன் என்பவருக்கு மகனாக ஒச்சன் என்ற உட்பிரிவில் பிறந்தார்.

அவரது பெற்றோர்கள், கடவுள் நரசிம்மரின் தீவிர பக்தர்கள் என்பதால், அவருக்கு ‘கம்பர்’ என்று பெயர் சூட்டினர். ‘கம்பா’ என்றால் ‘தூண் என்று பொருள்.

‘பக்தப் ப்ரகலாதனைக் காக்க, நரசிம்மர், தூணைப் பிளந்து கொண்டு வந்தார்’ என்ற பக்திக் கூற்றை கொண்டு, அவருக்கு அப்பெயர் சூட்டினர் அவரது பெற்றோர்.

நாதஸ்வர வித்வான்களான ஒச்சன் பரம்பரையில் பிறந்திருந்தாலும், அவர் தமிழ்நாட்டில் உள்ள வெண்ணை நெல்லூர் என்னும் ஊரில் உள்ள ஒரு பணக்கார விவசாயி ஒருவரால் செல்வ, செழிப் போடு எடுத்து வளர்க்கப்பட்டார் .

இளம் வயதிலிருந்தே அவர், தொன்மையான மொழிகளான சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியின் மீது பேரார்வம் உடையவராக இருந்ததால், அவரது நலம் விரும்பியான வள்ளல் சடையப்ப முதலியார் என்பவரின் உதவியுடன் அவ்விருமொழிகளை மிகுந்த ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார்.

சிறு வயதிலிருந்தே அவருக்கு கவிதைகள் எழுதும் ஆர்வம் இருந்தது. அம்மொழிகளின் அடிப்படையை பாரம்பரிய முறையில் நன்கு கற்ற அவர், பல கவிதைகளும், நூல்களும் எழுத தொடங்கினார். அதன் பின்னர், அவரது கவிப்புலமை எட்டுத்திக்கும் பரவத் தொடங்கியது. மாபெரும் கவிஞராக உருவெடுத்த கம்பரின் புகழை அறிந்த அப்போதைய சோழ மன்னர், அவருக்கு அழைப்பு விடுத்தார்.

அரண்மனைக்கு சென்ற அவர், மன்னரின் அன்பு கட்டளைக்கிணங்க அவரது படைப்புகளில் சில வரிகளை அவருக்குப் பாடிக் காட்டினார்.

அவரது கவித்திறனை நேரில் கண்டு வியந்த சோழ மன்னர், அவருக்கு, ‘கவிஞர்களின் பேரரசர்’ என்றும் அர்தமுடைய ‘கவி சக்கரவர்த்தி’ என்றும் பட்டம் சூட்டி, அவருக்கு சொந்தமான பெருவாரிய நிலத்தைப் பரிசளித்து, அதற்கு ‘கம்பநாடு’ என்றும் பெயர் சூட்டினார்.

கம்பரின் தாய்மொழி, தமிழ் என்றாலும், சமஸ்கிருதத் திலும் அவர் புலமைப் பெற்றே விளங்கினார் .

அதற்கு சான்று, அவர் எழுதிய ‘கம்பராமாயனம்’. முனிவர் வால்மீகி சமஸ்கிருதத்தில் படைத்த ராமாயணத்தை, அவர் தமிழில், அவருக்குரித்தான பாணியில் மீண்டும் எழுதினார்.

அவரது பாடல் வரிகளின் அழகு, அற்புதமான நயம், உவமானம் மற்றும் பல வகையான வியக்கத்தகு கவிதை நடைகள் அவரது பாரம்பரிய கவிதைகளில் இடம் பெற்றிருக்கும்.

## இலக்கிய நயம்

தமிழ்மொழியின் பெருமையை, இடைக்கால கால கட்டங்களில் அற்புதமாக வெளிக்காட்டியதால், அவர் ‘கம்ப நாட்டாழ்வார்’ என்றும் அழைக்கப்பட்டார் .

கம்பராமாயணம், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிப்பட்ட இடத்தைப் பிடித்து, தமிழ் இலக்கியத்தையே வானளவிற்கு உயர்த்தியது என்று சொன்னால் அது மிகையாகாது .

கவிதை வடிவங்களில் ஆளுமைப் பெற்றவராக இருந்த அவர், வார்த்தைகளில் பலவிதமான அற்புதங்களை நிகழ்த்துபவர் என்பது அக்காவியத்தில் பல இடங்களில் தெளிவாகத் தெரியும் .

உருவகமும், உவமானமும் நிறைந்த கம்பராமாயணம், பின்னாளில் வரும் கவிஞர்களுக்கு ஒரு குறிப்புதவி நூலாக அமைந்தது. வால்மீகி எழுதிய ராமாயணத்தில் 24, 000 ஈரடிகள் இருக்கும். ஆனால், கம்பராமாயணத்தில் 11,000 சந்தங்கள் இருக்கும். தமிழர்களின் கலாச்சார உணர்திறனுக்கேற்ப அவர், வால்மீகியின் ராமாயணத்தில் பல இடங்களை மாற்றி அமைத்துள்ளார்.

சீதையைக் கண்ட ஆஞ்சநேயர், அதை ராமனிடம் தெரிவிக்கும் போது, கண்டனன் கற்பினுக் கணியை கண்களால் என்ற ..,அற்புத வார்த்தைகள் இன்றளவும் தமிழ் இலக்கியத்தில் மறக்க முடியாத அடிகளாக இருந்து வருகிறன.

இராவணன், சீதையைக் கடத்திக் கொண்டு போகும் போது, அவள் கற்பிற்கே இலக்கணமாக இருந்தாள் என்பதற்காக .., அவள் இருந்த குடிசையோடு சிறிதளவு நிலத்துடன் பெயர்த்தெடுத்து அவளைக் கடத்திக் கொண்டு போனான் என்றும் அற்புதமாக விளக்கியிருப்பார்.

போரில், ராமன் தொடுத்த ஒரு அம்பு, அவனது உடல் முழுவதும் துளைகளை ஏற்படுத்தியது. இதைக் கம்பர், ராவணன் சீதை மீது கொண்ட அழிவு நோக்கிய காதல், அவனது உடலில் எங்குள்ளது என்பதை அறியும் சல்லடையாக இருந்தது அந்த அம்பு என்று யாராலும் யூகிக்க முடியாத அளவிற்கு அற்புதமாக விளக்கியிருப்பார்.

கவிச்சக்ரவர்த்தி கம்பர், கிபி 1250 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

இதுவரை வந்த தமிழறிஞர்கள் பட்டியலில், கம்பர் யாரும் எட்ட முடியாத இலக்கில் உள்ளார் என்று தான் சொல்லவேண்டும்.

ஆனால், இன்றளவும் தமிழ் அறிஞர்கள் மத்தியில், கம்பனின் கவிதைத் தொகுப்புகள் இணையற்றதாகவே உள்ளன.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# எல்லோருக்கும் நல்லவன் தன்னை இழந்தான்!



ஒரு தந்தையும் மகனும் தங்களுடைய கழுதையை விற்பதற்காக சந்தைக்கு ஓட்டி சென்று கொண்டிருந்தனர். அதைப் பார்த்த வழிப்போக்கர்கள் சிலர் இவர்களைப் பார்த்து, “பாரேன், இவர்களை, அற்புதமான கழுதையை ஓட்டிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யாராவது அதில் ஏறிச் செல்லலாம். ஆனால் பொருளைக் கொடுத்த கடவுள் அதைப் பயன்படுத்த அறிவைக் கொடுக்கவில்லை, இவர்களுக்கு” என்று ஏளனம் செய்தனர்.

இதனால் வெட்கப்பட்டுப் போன தந்தையும் மகனும் ஒரு முடிவு செய்து, வயதில் சிறியவனான மகன் கழுதையின் மேல் உட்கார்ந்து கொண்டு, தந்தை நடந்தவாறே இருவருமாகப் போனார்கள்.

அப்போது வேறு சில வழிப்போக்கர்கள், “இங்கப் பாருடா அநியாயம்! பெரியவர் நடக்கமுடியாமல் நடக்கிறார், இந்த வாலிபப் பையன் சொகுசா கழுதை சவாரி செய்கிறான்” என்று கிண்டலடித்தனர்.

இதைக் கேட்டு இவர்கள் கூறுவதில் நியாயம் இருப்பதாக உணர்ந்த பையன்,



தந்தையைக் கழுதையில் உட்காரவைத்து இருவரும் புறப்பட்டனர். இன்னும் சற்று தூரம் சென்ற பின் ஒரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து “கலி முற்றிவிட்டது. இங்கப் பாரு! நல்லா சுக்குமாந்தடி போல இருக்கிற பெரியவர், ஒரு நோஞ்சான் பையனை நடக்கவிட்டு தான் மட்டும் சொகுசாக கழுதை மேல் ஏறிப்போகிறார்” என்றான்.

வழக்கம் போல இதைக்கேட்ட தந்தை–மகன் இருவரும் ஒரு சேர கழுதைமேல் ஏறிகொண்டனர். இனி இந்த உலகம் தங்களைப் பார்த்துக் கேலிப் பேசாது என்று தந்தைக் கூறினார்.

கொஞ்ச தூரம் சென்றபின் இன்னொரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து “இரண்டு தடியன்கள், ஒரு நோஞ்சான் கழுதையின் மேல் ஏறி சவாரி செய்கிறார்கள், இரக்கங்கெட்ட ஜென்மங்கள்!” என்று காட்டமாக விமர்சித்தான்.

இதைக் கேட்டு வருந்திய தந்தையும், மகனும் கழுதையிலிருந்து குதித்தனர். இனி என்ன செய்வது? என்று சிந்தித்தனர். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு “மக்கள் மனம் மகிழ கழுதையை நாம் கட்டித் தோளில் சுமந்து செல்வோம்!” என்று முடிவு செய்தனர்.



அவ்வாறு கழுதையைத் தோளில் சுமந்து செல்கையில் வழியில் ஒரு காட்டாறு குறுக்கிட்டது. அதைக் கடக்கையில் கழுதை மிரண்டு போய் வெள்ளத்தில் விழுந்தது. கால்கள் கட்டப்பட்டிருந்ததால் அதனால் நீந்த முடியவில்லை! எனவே அது ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. தந்தையும் மகனும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.



# வெற்றித் தத்துவங்கள்

1.வாழ்க்கையில் வெற்றி என்னும் படிகளை நாம் தொடும் போது அதில் தோல்வி என்னும் 1,000 குழிகள் இருக்கும்.. குழியில் விழுந்து முயற்சிப்பவன் விண்ணை தொடுவான். குழியில் விழுந்து முயற்சிக்காதவன் மண்ணை தொடுவான்.

2. வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

3. நேரத்தை வீணாக்கத் துணிந்தவர்கள், வாழ்க்கையின் மதிப்பை அறியாதவர்கள்.

4. லட்சியம் பெரிதாக இருக்குமானால் நமது வெற்றியும் பெரிதாக இருக்கும்.

5. எல்லோருமே வெற்றியை விரும்புகின்றனர். ஆனால் ஒரு சிலரே அதற்காக உழைக்கின்றனர்.

6. மனிதராகப் பிறந்த எல்லோரும் தவறு செய்கிறார்கள். மூடர்களோ அதை தொடர்ந்து செய்கிறார்கள்.

7. உங்கள் காலில் நில்லுங்கள், அது தானாகவே உங்களை வழிநடத்திச் செல்லும்.

8. எதிலேனும் சிறந்து விளங்குவதற்காக எத்தகைய முயற்சிக்கும் அஞ்சாதீர்.

9. மிக அதிக உயரத்தை அடைய விரும்பினால் கீழ்மட்டத்திலிருந்து தொடங்கு.

10. கற்றுக்கொள்வதற்காக வாழுங்கள், உண்மையில் நீங்கள் வாழ்வதற்கு கற்றுக்கொள்வீர்கள்.

11. உங்கள் வெற்றியின் ரகசியம், உங்களுடைய தினசரி செயல்பாட்டின் மூலமே நிர்ணயம் செய்யப்படுகின்றது.

12. பணத்தை விட நேரம் அதிக மதிப்புடையது ஏனென்றால் நேரம் ஈடு செய்யமுடியாதது.

13. வெற்றி என்பது உங்களுக்கு என்ன தேவையோ அதை பெறுவது; மகிழ்ச்சி என்பது நீங்கள் எதை பெற்றீர்களோ அதை விரும்புவது.

14. பலவீனமான மனங்களே சோம்பலிடம் தஞ்சம் அடைகின்றன. முட்டாள்களின் சுகமான பொழுதுபோக்குதான் சோம்பல்.

15. நிறைய பேர் அறிவுரை பெறுகிறார்கள். ஆனால் அறிவுள்ளவர்கள் தான் அதனால் பயன் பெறுகிறார்கள்.

16. எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனே நிகழ்காலத்தை நுகரலாம்.

17. பெரிய எண்ணங்களை சிந்தனை செய்; ஆனால் சிறிய இன்பங்களுக்கு சந்தோஷப்படு.

18. தவறவிட்ட வாய்ப்பை விட அதிக மதிப்புடைய விஷயம் வேறு எதுவுமில்லை.

19. வருத்தமோ, துன்பமோ இன்றி எவராலும் எளிதில் புகழ்பெற முடியாது.

20. கெட்ட விஷயங்கள் காற்றைப்போல் ஆகி விரைவில் பரவும். நல்ல விஷயங்கள் தாமதிக்கும்.

# சிந்தனை துளிகள்

1.துன்பத்துள்தான் இன்பம் இருக்கிறது. எனவே துன்பத்தை எதிர்கொள்ள தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்பவனே சிறந்த மனிதன்.

2. எல்லோரிடமிருந்தும் கற்றுக் கொள்பவனே சிறந்த மனிதன்.

3. நமது மனிதநேயத்தின் அளவை அளக்கும் கருவி. நாம் பிறருக்கு உதவி செய்யும் போது ஏற்படும் மகிழ்ச்சியின் அளவை பொறுத்தது.

4. எதிலும் துணிந்து பங்கேற்று பல்வேறு அனுபவங்களையும் சுவைக்கத் தவறாதீர்.

5. இரத்த ஓட்டம் சீராக இருக்க வேண்டும். புகழ் ஓட்டமும் அது போலத்தான். அதுதான் சீரிய உடல் நலத்திற்கு அடையாளம்.

6. உடல் நலம் பெரிதும் மனநலத்தைப் பொறுத்தது.

7. நம்மால் முடியாதது யாராலும் முடியாது. யாராலும் முடியாதது நம்மால் மட்டுமே முடியும்.

8. மனிதன் அடக்கம் என்ற போர்வையில்தன்னைப் போர்த்திக் கொள்ள வேண்டும்.

9. நோய்களில் கொடிய நோய் மூட நம்பிக்கை என்ற நோய்தான்.

10. மணிக்கணக்கில் பேசாமல், மணிமணியாக பேசுதல் சிறப்புடைத்து.



# தன்னம்பிக்கை

கழுகு, பறவை இனங்களிலே அதிகபட்சமாக 70 ஆண்டுகள் உயிர் வாழக்கூடியது. ஆனால் 70 ஆண்டுகள் வாழ்வதற்கு கழுகு, தனது 40ஆவது வயதில் மிகப்பெரிய ஒரு போராட்டத்தை சந்திக்க வேண்டியிருக்கிறது.

கழுகின் நாற்பதாவது வயதில், அதன் அலகு மற்றும் சிறகுகள் வலுவடைந்து, பறப்பதற்கு மிகுந்த சிரமத்தை கொடுக்கின்றது. இதே நிலை நீடித்தால் கழுகினால் பறக்கவோ இரை தேடவோ முடியாது.

இந்த நிலையில், கழுகு இரண்டு வழிகளில் ஏதாவது ஒரு வழியை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. ஒரு வழி மரணம் . மற்றொரு வழி, ஐந்து மாதங்கள் மரண வலியை தாங்க வேண்டிய துறவு வாழ்க்கை.

அதாவது ஒன்று, கழுகு இறக்க வேண்டும் இல்லையேல் ஐந்து மாதத்திற்கான போராட்டம் மிகுந்த ஒரு வாழ்வினை அது வாழ வேண்டும். முடிவில் கழுகு 5 மாத போராட்ட வாழ்க்கையை தேர்ந்தெடுக்கிறது.

அதன்படி கழுகு உயரமான மலையில் சென்று தன் அலகினை பாறையில் உரசி முகப்பினை முறித்து விடுகிறது. மேலும் தன் இறக்கையில் இருக்கக்கூடிய, ஒவ்வொரு இறகுகளையும், வலியைத் தாங்கிக்கொண்டு உருவி போடுகின்றது.

பசியையும், தாகத்தையும், பயங்கரமான வழியையும் தாங்கிக் கொண்ட கழுகு, 5 மாதத்திற்கு பிறகு, புதிய சிறகுகளோடும், அழகோடும் இளமையாக தோன்றி, அடுத்த 30 வருடத்திற்கு ஆரோக்கியமான ஒரு வாழ்வினை வாழ்கின்றது.

ஐந்தறிவு ஜீவராசிகள் கூட தனது வாழ்விற்காக, மிகப் பெரிய போராட்டத்தை எதிர் கொண்டு வெற்றி அடையும் பொழுது, ஆறறிவு பெற்ற மனிதனால் போராட்டத்தை எதிர்கொண்டு வெற்றியடைய முடியாதா? சிந்தித்து செயலாற்றுங்கள்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# வலிமை இழப்பும் பண்பாடும்



பிரச்சினைகளோடு வாழ்ந்து வருபவர்களை நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பதை வைத்து வலிமை இழப்பை (Disability) இன்னொரு வகையில் விவரிக்க முடியும்.

ஒரு மனிதன் எங்கே பிறந்திருந்தாலும் வலிமை இழப்பு என்பது ஒரு சவாலாகத் தான் வெளிப்படுத்தப்படுகிறது.

இத்தகைய சவால் இந்தியாவைப் போன்ற வளரும் நாடுகளில் வாழ்பவர்களுக்கு பெரிதாகி விடுகிறது. இத்தகைய மனிதர்களுக்கும் இவர்களுக்கு தொண்டு புரிவோருக்கும் பண்பாட்டுப் பின்புலத்தைப் புரிந்து கொள்வதும், பொருத்தமான ஒரு பண்பாட்டு மாதிரியைப் பின்பற்றுவதும் மிக முக்கியமான அங்கமாக இருக்கிறது.

ஒரே மாதிரியான மதிப்பீடுகளையும், பார்வைகளையும் கொண்டவர்களாக இருப்பது இருவரின் செயல்களையும் எளிதாக்கும். நமது கண்டுணர்தல் மீதும் பார்வை மீதும் செல்வாக்கு செலுத்துவது பண்பாடே ஆகும் . மேலும், மனிதர்கள் சமூகத்தை எப்படி பார்க்கின்றனர் என்பதை அவர்களின் மொழி வெளிப்படுத்தும்.

சமூகத்தின் மனப்பான்மை மீது செல்வாக்கு செலுத்துவதுடன், தனி நபர்களின் வாழ்க்கையின் மீதும் இது தாக்கத்தை உருவாக்கும். ஆகவே, வலிமை இழப்பு பற்றி பேசும் போது தனி கவனம் தேவை என்பது வலியுறுத்தப்படுகிறது. சில வெளிப்பாடுகள், அவற்றின் தன்மைகளின் அடிப்படையில் வலிமை இழந்த மனிதர்களை தரக் குறைவாகவும், மட்டப்படுத்தியும் காட்டுவதுடன் அவர்களைப் பற்றிய பொருத்தமற்ற, ஒரே மாதிரியான சிந்தனைகள் தொடர்ந்து நீடித்து நிலவவும் வழி செய்கிறது. மனித மாண்பையும், பெருமையையும் பாதுகாப்பதுடன் உடல் குறைபாடு உடையவர்கள், கற்றல் குறைபாடு அழுத்தத்துடன் வாழ்பவர்கள் ஆகியோரை கௌரவத்துடன் குறிப்பிடவும் வகை செய்கிறது.

பண்பாட்டின் தனித்துவமிக்க, தகுதி வாய்ந்த தன்மையை வெவ்வேறு கோணங்களில் ஆராய்ந்து பார்க்கும் போது வலிமை இழப்பிற்கு அது ஒரு ஆழமான பொருளைத் தருகிறது. வலிமை இழப்பை பொருத்தமாகவும், தகுந்த பொருளுடனும் புரிந்து கொள்வது சேவை அளிப்பவர்களுக்கு பயன் தருவதாக இருக்கும். வலிமை இழந்திருப்பவர்களை பல்வேறு சூழல்களில் பல்வேறு சொற்களைப் பயன்படுத்தி சமூகம் முத்திரை குத்துகிறது.

இதன் விளைவாக வலிமை இழப்போடு தொடர்புடைய களங்கம் ஒரு போதும் துடைத்தெறிய இயலாததாக இருந்து வருகிறது. ஒரு தனி நபரின் ஊனமுடைய தோற்றம் குடும்பத்தின் செயல்பாட்டில் எதிர்மறையான செல்வாக்கை செலுத்துகிறது. குடும்ப உறவுகளை பாதித்து மன சஞ்சலங்களையும், செயல் குறைவையும் உருவாக்கி பெற்றோருக்கும் தனி நபருக்கும் அல்லது மற்ற குடும்ப உறுப்பினர்களுக்குமான உறவு நிலையை பாதித்து விடுகிறது.

இவற்றையெல்லாம் கவனிக்கத் தவறினால் குடும்பம் ஒரு நிலையான சிக்கலில் சிக்கி விடும். இதனால் குடும்ப அமைப்பு சிதையவும், எதிர்மறையான குடும்பச் சூழல் உருவாகவும் நேரிடும். வலிமை குறைவாக இருப்பவரின் குடும்ப உறுப்பினர்களின் எதிர்பார்ப்பு குறைவினால் குடும்பம் பொருளா தார, சமூக அந்தஸ்திலிருந்து தாழ்வுறும். பெற்றோரின் கல்வியறிவு, அவர்களின் முன் அனுபவம் போன்றவை இத்தகைய சூழலை நெகிழ்வாக்குவதில் மிக முக்கியமான பங்களிப்பை செய்யும்.




வீட்டுக்கு வெளியில் உள்ள உறவினர்கள், நண்பர்கள், அண்டை அயலார், பொது வெளியில் உள்ள மனிதர்கள் போன்றோர் மாற்றுத் திறனாளியிடம் நடந்து கொள்ளும் முறை இவர்களின் சமூக நடத்தையை ஒழுங்குபடுத்தும். இதில் எழக் கூடிய பல விதமான சூழ்நிலைகளுக்கேற்ப தொழில் முறையாளர்களின் இடையீடு தேவையாகிறது. இத்தகைய பிரிவினருடன் பணி யாற்றி வரும் சமூகப் பணியாளர்களின் பங்களிப்பு இதனால் மேம்படும்.

உடல் குறைபாடு உடையவர்களை கையாள்வது ஒரு சவாலான காரியம். இவர்களுக்கு துணையாக இருப்பவர்களை 2 வகையாக பிரிக்கலாம். முதல் நிலை துணையாளர்கள் மற்றும் இரண்டாம் நிலை துணையாளர்கள். முதல் பிரிவில் குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும் அடங்குவர்.

இரண்டாம் பிரிவில் மருத்துவர்கள், செவிலியர், இன்ன பிற நெறி முறையாளர்கள் வருவர். இந்த வகையில் பண்பாட்டு அடிப்படையிலான மாதிரிச் செயல்பாடு ஆர்வம் தருவதாக உள்ளது.

» மாற்றத்திற்கான ஓர் ஊக்கியாக செயல்படுவது.
» மிகப்பரவலான ஆதரவுசேவைகளைவழங்குவது.
» வலிமை குறைவுடைய தனி நபர்களுடன் பணியாற்றும்படி குடும்பத்தினரையும், சமூகத்தையும் உற்சாகப்படுத்துவது.
» வேறுபட்ட விரும்பத்தகாத சூழலை சந்தித்து மீள்வதற்கு தனி நபருக்கும், குடும்பத்தினருக்கும் உதவுவது.
» வெளிப்படைத் தன்மையை ஊக்குவிப்பது.
» இரு பக்கத்தினருக்கும் ஆதரவு காட்டுவது.
» ஆதரவு தரும் ஆதார அமைப்புகளோடு குடும்பங்களை இணைப்பது.
» உளவியல் ஆலோசனை வழங்குவது, மன நலத் தலையீடு, நடத்தைப் பிணி நீக்கல், எடுத்துக் கூறுதல், பயிற்றுவித்தல், பட்டறைகள், கருத்தரங்குகள், பொம்மைகள், புத்தகங்கள், நூலகம், மறுவாழ்வுக் கருவிகள், உதவிக் கருவிகளை வழங்குவதன் மூலம் குடும்பத்தினரின் புரிதலையும், திறன்களையும் மேம்படுத்துவது. குறுகிய கால, நீண்ட கால இடை ஓய்வு கவனம், சமூக உதவியும் துணையும், தகவல், கலந்தாய்வு, வழிகாட்டுதல், போக்குவரத்து தேவைகளை நிறைவு செய்வது. பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கிடையே பரஸ்பர தொடர்பை உருவாக்குவது.
» கலாச்சார போட்டி நிலவும் சூழலை உருவாக்குவது.
» வலிவுகுறைவுடையதனிநபர்கள்ஒவ்வொருவரும் பங்கேற்கக் கூடிய வளர்ச்சியை ஆதரிப்பது.






ஆராய்ச்சியாளர்கள் இந்த மாதிரி பற்றி கருத்துருவை பயன்படுத்துகின்றனர். நோயாளியின் சமூகத்தில் உள்ள தொழில்முறை நலம் பேணுநர்கள் நலச் சேவைகள் கிடைக்கும் விதம் பற்றியும், அவற்றைப் பெற்றுக் கொள்ளும் வழி வகைகள் பற்றியும் பாதிக்கப்பட்டவரிடம் விளக்குவதற்கு இது முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது.

வலிமை குறைவு உடையவர்கள் மீது அக்கறை செலுத்தும் அமைப்பில் பணியாற்றும் சேவையாளர்கள் சிறந்த நடைமுறைகளைக் கையாளுவதை ஊக்குவிப்பதுடன், பண்பாட்டு விழுமியங்களை கைக்கொண்டு ஒழுகுவதையும் இந்த மாதிரி உறுதி செய்கிறது. மத இணைவுகள், கல்வி, ஊடகம், தொழில், வருவாய் போன்றவை மாற்றுத் திறனாளிகள் பற்றிய மக்களின் மனப்பான்மை, புரிதல் ஆகியவற்றைப் பாதிக்கக் கூடிய காரணிகளாகும்.

உதவி புரிவோரை சமூகத்திற்கும் சேவைக்கும் இடைப்பட்ட ஒரு பாலமாக செயல்பட இது வழி செய்கிறது. இதனால் அந்தந்த சமூகங்களுக்கு ஏற்ற பொருத்தமான தீர்வுகளைத் தரக் கூடியதாக பண்பாட்டு மாதிரி அமைகிறது. பாதிக்கப்பட்டோரை குடும்பம், சமூகம் ஆகியவற்றோடு இணைத்திடவும் செய்கிறது. நம்பிக்கையையும் நல்லுறவையும் ஏற்படுத்தி இடையீட்டை திறம்பட செயல்படுத்தவும், தொடர்புகளை நீடிக்கச் செய்யவும் இது வழி செய்கிறது.

இந்த மாதிரியின் படி பணிபுரிபவர் இரு வகைப்பட்ட பங்களிப்புகளைச் செய்யும் பொறுமை உடையவராகவும், இடர்களை எதிர்கொள்ளும் துணிவு கொண்டவராகவும் இருக்க வேண்டும். விளிம்பு நிலையிலும் பணி புரியக் கூடியவராக இருத்தல் வேண்டும். அனைத்திற்கும் மேலாக சிறப்பான தகவல் தொடர்பு ஆற்றல் உடையவராக இருக்க வேண்டும். வலிவு குறைந்தவர்களுக்கான சேவையில் ஈடுபடும் தொழில்முறையாளர்கள் இவற்றில் கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இவற்றோடு கூட தனி நபர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஆரம்ப நிலையிலேயே தரப்படக் கூடிய தொடர்ச்சியான பல்துறை பிணி நீக்கல் முயற்சிகள், தனி நபரின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து அதற்கேற்றபடி மாற்றங்களை ஏற்படுத்தி வழங்கப்படும் நோய் நீக்கல் பயிற்சிகள், திட்டங்கள். பெற்றோரின் அறிவாற்றலையும், புரிதலையும் மேம்படுத்தக் கூடிய உளவியல் ஆதரவு, பாதிக்கப்பட்ட தனி நபரின் தேவையை உணர்ந்து கொண்டு செய்யப்படும் உதவி போன்றவையும் தொழில்முறை உதவுநர்களின் செயல்களாக அமைய வேண்டும். இந்தியாவில் நிலவக் கூடிய நிலைமைகளை கருத்தில் கொண்டு தங்கள் செயல்பாடுகளையும் பொறுப்புகளையும் மேம்படுத்துவது என்பதை விடவும், தவிர்ப்பது என்ற நிலையைச் சுற்றியே இங்குள்ளவர்கள் மையமிட்டுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி என்பது குடும்பங்களின் உதவியையும் உள்ளடக்கியது. பாதிப்புக்கு உள்ளாகி இருப்பவர்களுக்கு மருத்துவ உதவி, சமூக ஆதாயங்கள், வீடு போன்றவை கிடைக்கவும் தனிப்பட்ட உதவிகள், மறுவாழ்வு உபகரணங்கள் கிடைக்கவும், பணி புரிய இயலாதவர்களுக்கு சமூக மறுவாழ்வு அமைப்பும், மறுவாழ்விற்கான தொழில் பயிற்சி, தனிப்பட்ட உதவி, ஆதரவுக்கரம், சட்டப் பாதுகாப்பு, அர்த்தமுள்ள துடிப்பு மிக்க ஓய்வு நேர செயல்பாடுகள், விளையாட்டு, பொழுதுபோக்கு போன்றவையும் பாதிக்கப்பட்டோருக்கு தேவையாகின்றன.

எனவே, இதில் ஈடுபடும் பணியாளர்கள் பாதிக்கப்பட்டவர்களின் பின்னலமைப்பை உருவாக்கும் திறன் கொண்டவராக, நெகிழ்வும் கற்றுக் கொள்ளும் ஆர்வமும், செயலாற்றும் சிந்தனையும் உடையவராக இருத்தல் அவசியம்.



# யாழ் ஆயரின் ஆசிச் செய்தி




**இலக்கம் 769 கடற்கரை வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் திருச்சிலுவைக் கன்னியர் சபையினரின் திருச்சிலுவை சுகநல நிலையம் பணியில் 40 ஆண்டுகளை 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொட்டு நிற்கிறது. நிலையத்தினருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு றூபி ஆண்டு என்று அழைக்கப்படும் 40ஆவது ஆண்டு நிறைவில் இவர்கள் வெளியிட்ட சுகநலம் என்ற சஞ்சிகையில் இருந்து சில முக்கிய ஆக்கங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் வாசக அன்பு நெஞ்சங்களுக்குத் தருகிறோம்.**




யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் கடந்த நாற்பது ஆண்டு காலமாகச் சுகநலப் பணியாற்றி வரும் திருச்சிலுவைக் கன்னியரின் பணி மகத்தானது. நன்றியோடு பாராட்டப்பட வேண்டியது.

அவர்களின் சுகநலப் பணியின் நாற்பது ஆண்டுகள் நிறைவில் அவர்கள் ஆற்றும் இந்த அன்பான, அர்ப்பணம் மிக்க சுகநலப் பணிக்காக எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து தொடர்பணி சிறக்க இறைஆசீர்களையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை, கொழும்பு புனித மைக்கல் நேசிங் கோம் ஆகிய வைத்திய நிலையங்களில் பணியாற்றிய பெருமையுடன் அதற்கு மகுடம் வைத்தாற்போல் 1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் தமக்கெனச் சொந்தமான சுகநலப்பணி நிலையத்தை நிறுவி அன்பு, இரக்கம், புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை ஆகிய நற்பண்புகளுடன் நோயுற்றோருக்குச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தம் பணியை மேலும் விரிவுபடுத்தி பரந்தனில் தமது ஒரு சுகநல நிலையத்தை நிறுவியுள்ளனர்.

மேலும் மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை ஆகிய மறைமாவட்டங்களிற்குச் சொந்தமான சுகநலசேவை நிலையங்களிலும் இவர்கள் பணியாற்றி வருவது பாரட்டுதற்குரியது.

இன்று இலங்கை நாட்டில் வைத்திய சேவைப் பணிகள் வேகமாக வளர்ந்துள்ள வேளையில் அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் திருச்சிலுவைக் கன்னியரின் சுகநல நிலையமும் வளர்ந்துள்ளது.

தமது கன்னியர் சபையைச் சேர்ந்த அருட் சகோதரிகளான அருட்சகோதரி இமாக்குளேற் யோசவ், அருட்சகோதரி பப்ரிஸ்ரா பத்திநாதர் ஆகிய வைத்தியர்களை பணிக்கமர்த்தியுள்ளனர். மேலும் தமது தேவைக்கு ஏற்ற பயிற்சி பெற்ற கன்னியர்கள் மற்றும் பயிற்றப்பட்ட பணியாளர்களை உருவாக்கியுள்ளனர். வைத்திய சேவைப் படிப்பும் பயிற்சியும் வழங்கக்கூடிய சொந்தக் கல்விக்கூடத்தை உருவாக்கியுள்ளனர். புதிய கட்டிட வசதிகள் – நவீன வைத்திய உபகரணங்கள் என இவர்கள் வளர்ந்து கொண்டே இருப்பது பாரட்டுதற்குரியது

பலரின் எண்ணத்தையும், ஏக்கத்தையும், எதிர்பார்ப்பையும் நிறைவு செய்யும் விதமாக இந்த சுகநல நிலையங்களை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் அனைவரையும், மறைந்து போனவர்களையும், ஓய்வு நிலையில் உள்ளவர்களையும், இன்றும் பணியாற்றுவோரையும், அவர்களின் பெயர்களை இங்கு குறிப்பிடாவிடினும் நன்றியோடு நினைத்து வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

யாழ்ப்பாணம் மறைமாவட்டக் குருக்கள் பலர் இங்கு தங்கி மருத்துவ சேவை பெற்றுள்ளனர். ஏன் சிலர் இங்கேயே தமது இறுதி நேரத்தை அமைதியாக முடித்துள்ளனர். இந்தப் பணிக்காகவும் எமது விசேட நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி

Sisters of the Holy Cross
Menzingen

திருச்சிலுவைக் கன்னியரின் சுகநலப் பணிகள் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் மற்றைய இடங்களிலும் தொடர்ந்து வளர்ந்து பணியாற்ற இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,**
**மேதகு ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**
**யாழ் ஆயர்**

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஜனநாயகத்தில் எண்ணுதலும் – உடைத்தலும்

**அங்கம் - 215**

இரண்டு வருடங்களுக்கு முன் என்ற நினைப்பு. ஆனந்தவல்லியும் அவரது மகனும் 'எண்ணுதலும் உடைத்தலும்' ("Counting and cracking') என்ற தலைப்பில் இலங்கையின் இனப்பிரச்சினையின் தோற்றங்களையும் அவற்றால் மக்கள் புலம்பெயர்ந்த காரணங்களையும் கருவாக வைத்து மேடை ஏற்றிய நாடகம் ஆஸ்திரேலியாவிலும் பின்னர் லண்டனிலும் பார்வையாளர்கள் மத்தியில் பெரும் வெற்றியீட்டி இருந்தது.

இந்தத் தலைப்பு சுந்தரலிங்கம் ஜனநாயக மரபுகள் பற்றி நாடாளுமன்றத்தில் பேசிய போது அதன் தன்மைகளை எடுத்துக்காட்ட பயன்படுத்திய வார்த்தைகள். 19 ஜூலை 1956இல் திருத்தப்படாத நாடாளுமன்ற ஹன்சாட் பதிவுகளில் 21 ஆம் பகுதியில் 1276 ஆம் பந்தியில் பின்வரும் வாசகங்கள் உள்ளன:–

திரு.சுந்தரலிங்கம்:– மதிப்புக்குரிய பொலன்னறுவையின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.டி.சில்வா இந்த சபையில் ஜனநாயக பண்புகள் பற்றி பேசினார். அவர் ஜனநாயகத்தைப் பற்றியும் மனித அடிப்படை உரிமைகள் பற்றியும் புத்தகங்கள் படிக்க வேண்டும்.

ஜனநாயகம் என்பது இதற்கு மேலானதாக ஒன்று இல்லை. நீங்கள் (அப்பொழுது இஸ்மாயில் துணை சபாநாயகராக தலைமை வகித்தார்) உங்களுடைய மத கலாசார சின்னமான சிவப்பு குல்லாயை (ய்ளகு) அணிந்திருக்கிறீர்கள். நாங்கள் ஐந்து பேர் – இந்த நாடாளுமன்ற அங்கத்தினரான ஐந்து பேர் – எங்களுடைய கைகளை உயர்த்தி வாக்களித்து, நீங்கள் உங்களது குழாயை அணிய முடியாது என தீர்மானம் எடுக்க முடியாது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன (குறுக்கிட்டு):– ஏன் அப்படி முடியாது? அவர்களால் முடியும்..!

திரு.சுந்தரலிங்கம்:– ஆ! முடியுமா? அப்படியானால் ஜனநாயகத்துக்கான உங்களது அர்த்தம் இதுவாகத்தான் இருக்கிறது. இவை பதிவில் போகட்டும். அதாவது இவர்களது ஜனநாயகப் பண்புகளில் இந்த சபையில் தலைவரான ஜே. ஆர்.ஜெயவர்த்தனவின் அபிப்பிராயப்படி, உபசபாநாயகர் அவர்களே! அவர் உங்களைத் தொப்பி அணியாது சபைக்கு வரும்படி கூறலாம். எனது இந்த நண்பர்கள் தங்களது பெரும்பான்மை வாக்குகளினால், இந்தச் சபைக்கு நான் எனது நெற்றியில் திருநீறு அணிந்து வர முடியாது எனக் கூறினால், நான் அவர்களுக்கு எதிராக எனது முஷ்டியால் தாக்குவேன். இதைப் பற்றி ஒருவரும் பிழையான விளக்கத்தைக் கொள்ள வேண்டாம். இந்த சபையில் மனிதனின் அடிப்படை உரிமைகளை பற்றிய வாசிக்கிறேன்.

ஜனநாயகத்தின் உண்மையான நெறிகளில் ஜனநாயகத்திற்கு மாறுபட்ட செயல்களைச் செய்யக் கூடாது. உதாரணத்துக்கு சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக செயல்படக் கூடாது. அப்படி நடந்தால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினர் தங்கள் கைக்கு கிடைக்க கூடிய ஆயுதங்கள் எவற்றையும் அதற்கு எதிராகப் பாவிக்கலாம். எத்தனையோ தரம் நாடாளுமன்றத்தில் இதற்கு விளக்கங்கள் தந்து நேரடி நடவடிக்கைகளிலும் இறங்கிஉள்ளேன்.

ஜனநாயகம் என்பது ஒரு வரையறுக்குள் அதற்குள் அடங்கும் தலைகளைக் கணக்கெடுப்பதும் அந்த வரையறையை மீறிப் போனால் அந்த தலைகளை உடைப்பதும் என்பதுதான் (Democracy means and implies the counting of heads within certain bounds and cracking of heads beyond those bound).

இவை சபையில் நடந்தவை.

'எனது உரிமையில் கை வைத்தால், அடிப்பேன்!' என அடங்காத் தமிழன் சொன்னான்.

"நீங்கள் ஏன் திருப்பி அடிக்கவில்லை?" – என இளம் பிரபாகரன் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை நோக்கிக் கேட்டான். பின் அடிக்கு அடிதான் அவர்களைப் பதப்படுத்தும் என்றுராணுவத்தை வளர்த்தெடுத்தார். 'மேதகு' படத்தை இந்த பின்னணியில் தயாரித்து, வசூல் சாதனையில் பிரமிக்க வைத்தனர் என புலம்பெயர் இயக்கங்களின் தரவுகள் தந்தன. இவையும் பிரபாகரன் பார்வையும் கொள்கைகளும் தமிழ் மக்கள் மட்டத்திலேயே ஒரு பெரிய புலம்பெயர் சட்டிக்குள் ஓடின. தமிழர் அல்லாத பிற சமூகங்களை அது சிறிதளவில் கூடச் சென்று சேரவில்லை.

அந்த நாடகத்திற்கு உதவிகள் தர எழுத்தாளர் ரோபா சக்தி பரிஸிலிருந்து வந்த போது நான் அவரை சந்தித்திருந்தாலும் நாடகத்தைப் பார்ப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொள்ள முடியவில்லை.

இந்த நாட்களில் புலம்பெயர் தமிழ் மக்கள் செய்ய வேண்டிய யதார்த்தமான அழுத்தங்களுக்கு உதாரணம் தருவது போல தமிழ் அகதிகள் குடும்பம் ஆஸ்திரேலியா மக்களின் அனுசரணைக்கு ஆட்பட்டது ஆஸ்திரேலியாவின் தென்பகுதியில் பயல்போல(Biolola) என்று சிறிய நகரத்தின் மக்கள் தம்மிடையே அகதி கோரிக்கையாளர்களாக வாழ்ந்து வந்த பிரியா – நடேஸ் என்ற இளம் குடும்பத்தை அவர்களின் இரு சிறிய குழந்தைகளுடன் நாடு கடத்த முயன்று, ஆயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள தடுப்பு முகாமுக்கு உடுத்த உடுப்புகளுடன், கைக்குழந் தைக்கு பால்மா எடுத்துக்கொள்ள கூட விடாமல், வண்டிகளில் ஏற்றிக் கொண்டு போனதைக் கண்ட மக்கள் கிளர்ந்து எழுந்து அன்றிருந்த அரசுடன் போராடினார்கள். முதலில் குடியகல்வு அதிகாரிகள் அவர்களை இரு சிறிய குழந்தைகளுடன் ஆயிரம் கில. மீட்டர் தூரம் பால் மாவும் மாற்று உடையும் இன்றி அழைத்துச் சென்ற மனிதாபிமானமற்ற



பிரியா – நடேஸ் குடும்பம் இப்போது சுதந்திரமாக

செயல்தான் அவர்களை ஈடுபடத் தூண்டியது. அவர்கள் அகதி அந்தஸ்துக்கு உரியவர்கள் அல்லர் என அரசாங்கம் ஒற்றைக் காலில் விடாப்பிடியாக நின்ற போதும், அந்த மக்களும் படிப்படியாக பிரியா – நடேஸின் பின்னணியையும் தமிழ் மக்களின் அவலங்களையும் சிங்கள அரசின் தன்மைகளையும் அறிந்து, அவர்களை திருப்பி அனுப்பக் கூடாது எனப் போராடினார்கள். பொதுமக்களிடமிருந்து நிதி சேகரித்து (goFund) வழக்குகள் வைத்து, நீதிமன்ற தீர்ப்புகளினால் குடியகல்வுத் திணைக்களத்தின் தீர்மானங்களை மறுதலித்து, அவர்களை நாட்டுக்குள் (தடுப்பு காவலில் என்றாலும்) வைத்திருந்தார்கள். தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களது நாட்டில் நடக்கும் வன்முறைகளால் இந்தக் குடும்பத்தைத் திருப்பி அனுப்பக் கூடாது என்ற எழுச்சி உத்வேகம் பெற்றதால், எதிர்க்கட்சியான தொழிற் கட்சி, அதனை ஆதரித்து, தாங்கள் பதவிக்கு வந்தால் பிரியா – நடேஸ் குடும்பத்துக்கு நிரந்தர வதிவிடம் தருவதாக அந்த நகரத்தின் பிரதிநிதிகளுக்கும் தங்களது ஆதரவாளர்களுக்கும் வாக்களித்தது. அது போலவே, அவர்கள் பதவிக்கு வந்ததும் நிரந்தர வதிவிட விசாவை பிரியா – நடேஸ் குடும்பத்திற்கு தந்தார்கள். பிரியா – நடேஸ் குடும்பம் பெற்ற முடிவு, ஒரு தமிழ்க் குடும்பம் தற்செயலாக அவர்கள் வசித்த ஊர் மக்களின் ஆதரவால் அதிர்ஷ்டவசமாக பெற்றுக் கொண்டது அல்ல. தமிழ் மக்களின் நிலைகள் பற்றிய ஆவணப்படுத்தப்பட்ட பிரச்சாரங்கள், அழுத்தங்கள் தரும் தளங்கள், அவற்றை முறையாக செய்ததிலேயே இவ்விடயம் தங்கியிருந்தது. பிரியா – நடேஸ் முன்மாதிரியில், தொழில் கட்சி அரசாங்கம் சிறிது தாராள மனப்பான்மை காட்டும் எனப் பல அகதிக் கோரிக்கையாளர்கள் நம்பி இருக்கிறார்கள். ஆனால், நாட்டு நிலைமைகள் பற்றி சர்வதேசங்களின் கணிப்புகளும், நாட்டில் இருந்து பிரயாண முகவர்களுக்குப் பெருந்தொகை பணம் கொடுத்து ஆஸ்திரேலியா நோக்கி வரும் படகுகள், அரசாங்கத்துக்கு ஆதங்கத்தை தருகின்றன. உலகடங்கிலும் தமிழ் மக்களின் அகதி கோரிக்கைகள் இடர்களில் இருக்கின்றன.

### தலைமுறையின் இடைவெளி பார்வைகள்

சசிதரன் (சக்தி) சுந்தரலிங்கத்தின் மூன்றாவது தலைமுறை போரின் இக்கட்டுக்களையோ, ஏன் ஸ்ரீலங்காவில் கூட நீண்ட காலங்கள் அதன் அரசியல் அவனைத் தீண்டக்கூடிய விதத்தில் வாழ்ந்தவன் அல்லன். சில விடுமுறைகளுக்குச் சென்று வந்ததுதான். அவருடைய பெற்றோரை, நாட்டில் சுந்தரலிங்கம் அவர்களின் சகோதரர்களின் குடும்பங்கள் மூலம் அறிந்திருந்தேன். இந்தப் பெற்றோரும் அரசியலில் அக்கறை கொண்டிருந்தவர்கள் அல்லர். நாட்டின் நிலைமையை பார்வையாளர்களாக தெரிந்து கொண்டவர்கள். இந்த நாடகத்திற்கு இசையமைப்பு பொறுப்பையும் இசையை யும் தன் முதுகில் சுமந்தவன் எனது தம்பியின் மகன் அர்ஜுனன். ஆஸ்திரேலியாவிலேயே பிறந்து வளர்ந்து சட்ட பட்டதாரியானவர். ஸ்ரீலங்காவுக்கு விடுமுறையில் சில நாள்கள் சென்று வந்ததே ஒழிய தமிழ் மக்களின் இன்னல்களையும் போரின் அவலங்களையும் எங்களிடன் கேட்டு அறிந்தவர். இந்த நாடகத்தைப் பார்க்க வேண்டும் என்று இவர்கள் தந்த அழுத்தங்களால், இந்தத் தலைமுறையின் இடைவெளிகளில் உதித்தவர்கள் எப்படி இனப் பிரச்சினையை காணுகிறார்கள், மற்றவர்களுக்கு அறியத் தருகிறார்கள் என்ற பார்வைகளுக்காக சென்றேன். ஏமாற்றங்களிலும் பார்க்க, புலம்பெயர் சமூகம் எப்படித் தமிழ் மக்கள் தங்களை கடந்த சமுதாயத்தின் பிரச்சினைகளை அனுபவங்கள் மூலம் தர வேண்டும் என்ற நம்பிக்கை பிறந்தது. தாங்கள் வீரம் விளைத்தவர்கள், ஏமாற்றப்பட்டவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்கள் என்கின்ற பரவணி அரசியலைப் பேசாமல், பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவங்கள், பார்வைகள் ஊடாக மக்களுக்கு ஈர்ப்பு தரும் – அக்கறை கொள்ள வைக்கும் – கருத்துக்களைகதையின்கருகொண்டிருந்தது. அது (தமிழ் மக்களைத் தாண்டியும்) மக்களைச் சென்றடைந்தது என்பதை இரண்டு இடைவேளைகளில் சம்பாஷித்தவர்களுடனும், பலர் அந்த நேரங்களில் கூகுளில் சம்பவங்களின் பின்னணிகள் பற்றி மேலும் தகவல்களை தேடியமையும் சுட்டிக் காட்டின. பார்வையாளர்களில் 80 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் பிற இனத்தைச் சார்ந்த ஆஸ்திரேலியாக்கள். தமிழ் மக்களும் சிங்களவர்களும் மிகுதி 20 வீதத்தை நிரப்பினார்கள். ஒரு மாதத்திற்கு மேல் ஒவ்வொரு நாளும் (நுழைவுச் சீட்டு விற்பனையால்) மெட்னி காட்சி போட்டும் மண்டபம் நிறைய குறிப்பிட்ட விகிதத்தில் மக்கள் வந்தார்கள் என ஆனந்தவல்லி, அர்ஜுன்ன், சக்தி கூறினார்கள். இதனை மேலும் பார்க்கலாம்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கை நாட்டின் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்படவேண்டும் என்று தேசிய சமாதானப்பேரவைநம்புகிறது. பேரவையில் சிவில் சமூகத்தின் சார்பில் பிரதிநிதிகளாக இருக்கவேண்டியவர்களை சிபாரிசு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

இலங்கையின் பன்முக சமுதாய பின்புலத்தில், அரசமைப்பு பேரவைக்கான சிவில் சமூக பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் சகல சமூகங்களையும் உள்வாங்கும் கோட்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கைகள் அமையவேண்டும். அரச அதிகாரிகளின் தீர்மானங்கள் இலங்கைச் சமுதாயத்தின் பல்வகைகையையும் பன்முகத்தன்மையையும் மனதிற்கொண்டதாக இருக்கவேண்டும். இனம்,மதம் ஆகியவற்றை கணக்கில் எடுக்கவேண்டும். இதில் சாதி,பால், மாற்றுத்தினாளிகள், தொழில் மற்றும் பிராந்தியங்களும் அடங்கும்.

நாடு இன்று சிக்கியுள்ள பொருளாதார மற்றும் அபிவிருத்தி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசியல் தலைமைத்துவங்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஐக்கியம் முக்கியமானது.

அரசையும்தேசத்தையும்கட்டியெழும்பும் பணிகள் தாமதமின்றி முன்னெடுக்கப்படுவதற்கு ஏதுவாக அரசமைப்பு பேரவை விரைவில் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று நாம் கோருகிறோம். - என்று உள்ளது.

## ஜனவரியில் மின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. வரி அதிகரிப்பால் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு வரி அதிகரிப்பை தவிர மாற்று திட்டம் ஏதும் கிடையாது என குறிப்பிடும் அரசாங்கம் அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சிப்பது எந்த விதத்தில் நியாயமானது? 38 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செலவை குறைத்து பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க அரச தலைவர்களுக்கு மனமில்லை.

கடந்த ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்ட மின்சார கட்டண அதிகரிப்பால் நடுத்தர மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போதைய மின் கட்டண அதிகரிப்பை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மின்கட்டணத்தை 70 சதவீதமாக அதிகரிக்கும் பரிந்துரையை இலங்கை மின்சார சபை இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கவுள்ளது.

தற்போதைய மின்கட்டண திருத்தத்திற்கமைய 30 அலகுக்கு குறைவான மின்சாரத்தை பாவிக்கும் நுகர்வோரிடமிருந்து அறவிடப்படும் 360 ரூபா குறைந்தபட்ச மின்கட்டணத்தை 3 ஆயிரம் ரூபாவாகவும்,60 அலகுக்கு குறைவான மின்சாரத்தை பாவிக்கும் நுகவோரிடமிருந்து அறவிடப்படும் 780 ரூபா குறைந்தபட்ச கட்டணத்தை 5000 ரூபாவாகவும்,90 அலகுக்கு குறைவான மின் அலகுக்கு அறவிடப்படும் 1800 ரூபாவை 7000 ரூபாவாகவும்,மத தலங்களிடமிருந்து அறவிடப்படும் 1280 ரூபாவை 5300 ரூபாவாகவும் அதிகரிக்க பரிந்துரைக்கப்படவுள்ளது.

## தெஹிவளையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்துக்குள்ளாகியுள்ளனர். விபத்தில் படுகாயம் அடைந்த அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதன் போதே இருவர் உயிரிழந்துள்ளனர்.

## எதிர்க்கட்சிகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் எனஇடதுசாரிஜனநாயகமுன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கியதேசியகட்சியின்கொள்கைக்கு எதிராகவே 69 இலட்ச மக்கள் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான தீர்மானங்களினால் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் குறுகிய காலத்தில் பலவீனமடைந்தது.

தவறுகளை திருத்திக்கொள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தவில்லை. சிறந்த ஆலோசனைகளை வழங்கிய எம்மை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றினார். தவறான தீர்மானங்கள் நாட்டுக்கு பாரிய விளைவுகளை தற்போது ஏற்படுத்தியுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணைந்து கூட்டணியை அமைக்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

பொதுஜன பெரமுனவுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் மக்களாணை கிடையாது. இவ்விரு தரப்பினரையும் ஒன்றிணைத்து அமைக்கும் கூட்டணியை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்பதற்கான பேச்சுவார்த்தையில் தற்போது ஈடுபட்டுள்ளோம்.

வெகுவிரைவில் புதிய கூட்டணி ஸ்தாபிக்கப்படும். எந்த அரசியல் கட்சிக்கும் இனி தனித்து ஆட்சி அமைக்க முடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சரியோ தவறோ, தேர்தலை உரிய காலத்தில் நடத்தினார். அவரின் அந்த கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்ற வேண்டும். தேர்தலை பிற்போட்டால், அதற்கு எதிராக நீதிமன்றம் செல்வோம். - என்றார்.

## அட்மிரல் பதவி நிலை ......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் 2020 ஜூலை 15 அன்று இலங்கை கடற்படையின் 24 ஆவது தளபதியாக நியமிக்கப்பட்டார்.

அட்மிரல் நிாந்த உலுகெதென்ன 4 - நட்சத்திர தரத்திற்கு உயர்த்தப்பட்டதும், கடற்படைத் தலைமையகத்தை வந்தடைந்தார், அங்கு அவருக்கு கடற்படை மரபுகளுக்கு ஏற்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

அட்மிரல் நிாந்த உலுகெதென்ன, 1985 ஆம் ஆண்டு இலங்கை கடற்படையின் 13ஆவது உள்வாங்கலின் அதிகாரி கேடட்டாக இலங்கை கடற்படையில் இணைந்தார். கடற்படைக்கும் இலங்கைக்கும் குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றியுள்ள இவர், 37 வருடங்களுக்கும் மேலான தனது கடற்படை வாழ்க்கையில் இன்று விடைபெறவுள்ளார்.

## வியட்நாமில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுளது. பின்னர் அது உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கல்வயலில் உள்ள அவரின் வீட்டில் நடைபெறும் என குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# இனப் பிரச்சினை குறித்து அரசியல் தலைவர்களுக்கு போதியளவு விளக்கமில்லை என்கிறார் ஜோதிலிங்கம்




இனப்பிரச்சினை என்றால் என்ன என்பது தொடர்பில் எமது அரசியல் தலைவர்களுக்கு போதியளவு விளக்கம் இருக்கின்றது என்று கூறமுடியாது. இனப்பிரச்சினை என்றால் தமிழ் மக்கள் ஒரு தேசியமாக தேசமாக இருக்கின்றனர். அவ்வாறு இருப்பது அழிக்கப்படுவது தான் இனப்பிரச்சினை என அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை மற்றும் அரசறிவியல் துறை பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்' எனும் தலைப்பில் தொடர் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஒரு தேசிய இனத்தைத் தாங்கும் தூண்களாக இருப்பவை நான்கு விடயங்கள். அவை தேசிய இனம், வாழும் நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் எனும் நான்கு தூண்களும் அழிக்கப்படுவது தான் என்ற நான்கையும் அழிப்பது தான் இனப்பிரச்சினை. ஏன் அவர்கள் அதனை அழிக்கின்றார்கள் என்றால் அவர்கள் இலங்கைத்தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரியது எனக் கருதுகின்றார்கள்.

ஆகவே ஏனைய இனங்கள் இலங்கைத்தீவில் வாழ்ந்துவிட்டு போகலாம் ஆனால் ஒரு தேசிய இனமாக இருக்க முடியாது என்பது அவர்களது கருத்து. ஒரு தேசிய இனத்தை அழிக்க வேண்டுமென்றால் அந்த தேசிய இனத்தின் வாழும் நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் மற்றும் அங்கு வாழும் மக்களை கொத்துக் கொத்தாக கொலை செய்யுங்கள் அந்த தேசிய இனம் அழியும். ஆகவே இந்த அழிப்புத்தான் இனப்பிரச்சினை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு இருக்கவேண்டுமெனில், குறித்த அழிவுகளிலிருந்து பாதுகாப்பதே இனப்பிரச்சினைக்காக தீர்வாக காணப்படும். அவ்வாறு நாம் ஒரு தீர்மானத்துக்கு வருவோமாக இருந்தால் ஒரு தேசிய இனத்தின் அரசியல் தீர்வு கோட்பாட்டு அடிப்படையில் நான்கு விடயங்களை கொண்டிருக்க வேண்டும்.

முதலாவது அந்த இனத்தை தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். இரண்டாவது அந்த தேசிய இனத்தின் இறைமையை அங்கீகரிக்க வேண்டும். மூன்றாவது குறித்த இனத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்க வேண்டும். நான்காவது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஆட்சிப் பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

இலங்கையின் அரச அதிகார கட்டமைப்புக்குள் ஆட்சிப் பொறிமுறையை உருவாக்குவதென்றால் அது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சியாகத் தான் இருக்க முடியும்.

சமஷ்டி என்பது அரசின் இறைமை அதிகாரத்தை மத்திய அரசும் மாநில அரசும் பங்கிட்டுக்கொள்ளும் ஆட்சி முறையே சமஷ்டி ஆட்சி ஆகும்.

ஆகவே அவ்வாறான சமஷ்டி ஆட்சிப் பொறிமுறையை உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. குறிப்பாக சொல்லப் போவதென்றால் வடக்கு கிழக்கு இணைந்த அதிகார அலகு விடயத்தில் தமிழ் மக்கள் தமது கூட்டிருப்பையும் கூட்டு அதிகாரத்தையும் கொண்டிருப்பது அவசியம்.

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு இனங்கள் இருக்கின்றனர். குறிப்பாக முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள். வடக்கு கிழக்கு என்பது தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி முஸ்லிம் மக்களின் தாயகமும் தான். எனவே இதில் அவர்களது வகிபாகம் தொடர்பில் அவர்களோடு பேசித்தீர்க்கலாம். அதேவேளை முஸ்லிம்களது தனியலகுக் கோரிக்கையை தமிழ் மக்கள் சாதகமாக பரிசீலிக்கலாம். அதற்கும் முஸ்லிம் மக்கள் சம்மதிக்காவிடினும் தமிழ் மக்களுக்கு வடக்கு கிழக்கு இணைப்பு தேவையாக இருக்கின்றது. எவ்வாறாயினும் வடக்கு கிழக்கு இணைப்பு என்பது அவசியமாகின்றது.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரங்கள் தேவை. குறிப்பாக தமிழ் மக்கள் தேசிய இனம் என்ற அடிப்படையில் அதற்கு பிறப்பாலேயே உரித்துடையவர்கள். அதேவேளை நீண்ட இன அழிப்பு காரணமாக தமிழ் மக்கள் 50 வருடங்கள் பின்தள்ளியிருக்கின்றார்கள். எனவே சுயநிர்ணய உரிமை முக்கியம். அதேவேளை மத்திய அரசு ஒரு தேசிய இனமாக பங்குபற்றுவதற்குரிய பொறிமுறை அவசியமாகின்றது. சுயாட்சி அதிகாரங்களுக்குரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

13 ஆவது அரசலமைப்பு திருத்தம் தொடர்பில் பரிசீலனை செய்யும் போது இலங்கை இந்திய ஒப்பந்தம், 13 ஆவது திருத்தம், மாகாண சபைகள் சட்டம் என்பவற்றை வைத்து பரிசீலிக்க வேண்டும்.

13 ஆவது திருத்தத்தில் பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட இரு தரப்பும் எந்த வகையிலும் இணைந்து கொள்ளவில்லை என்பது இதன் குறைபாடு.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டுள்ளதால் பல விளைவுகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக தமிழ் மக்களின் கூட்டிருப்பு கூட்டு உரிமை துண்டாக்கப்பட்டது. தமிழ் முஸ்லிம் மக்கள் சிங்கள அரசின் தயவில் வாழும் நிலை உருவானது.

இன்றைய நிலையில் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்ற வேண்டும் என்ற நிலையில் கிழக்கின் ஒரு தரப்பு சிங்கள கட்சிகளோடு இணைந்தாவது கிழக்கு மாகாண சபையை கைப்பற்றலாமா என்று முயற்சி செய்து வருகின்றது. இது தமிழரசியலின் அடித்தளத்தை இல்லாமல் செய்யும் ஒரு செயற்பாட்டை நோக்கி நகரும் எனக் கருதுகின்றேன். – என்று தெரிவித்தார்.

# இடைத் தரகர்களினால் உற்பத்தியாளர்கள் நாட்டில் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்!

## கமக்கார ஒழுங்கமைப்புக்களின் சம்மேளன தலைவர் சுட்டிக்காட்டு



இடைதரகர்களினால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் என வவுனியா மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்புக்களின் சம்மேளன தலைவர் செ.சிறிதரன் தெரிவித்தார்.

இன்று தோற்கடிக்கப்பட்ட நிலையில் விவசாயம் போய்க்கொண்டிருக்கின்றது. இந்த நாடு விவசாயத்திலே தங்கியிருக்கின்ற நாடாக இருப்பதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் 45 ஆயிரம் ரூபா பெறுமதியில் பசளை வாங்கி விதைத்த 15 ஆயிரத்து 150 ஏக்கர் சிறுபோக நெல் ஒவ்வொரு விவசாயின் வீடுகளிலும் 100,150 பை வைத்திருக்கின்றார்கள்.

அன்று 45 ஆயிரம் ரூபாவிற்கு உரத்தை வாங்கி இன்று நெல்லை விற்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றோம். இந்த விவசாயிகளை பற்றி யாரும் சிந்திக்கவில்லையா?

இந்த நேரத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட விலை விற்கக்கூடிய நெல் 6,000 ஆயிரத்துக்கு வந்திருக்கின்றது. நாம் என்ன செய்வது? நெல்லை கொள்முதல் செய்ய யாரும் இல்லை, நாங்கள் நெல்லை விற்க முடியாமல் அடுத்த அறுவடைக்கும் தயாராகி கொண்டிருக்கின்றோம்.

விவசாயிகள் வீட்டில் உள்ள நகைகள் எல்லாம் அடைவில் போய்விட்டன. விவசாயிகளிடம் ஒன்றும் இல்லை. இந்த நிலைமையில் இம்முறை சிறப்பாக உழுந்து பயிர் செய்யப்பட்டுள்ளது. உழுந்து விளையும் போது 200 ரூபாவுக்கு போகுமோ தெரியாது.

ஆனால் இன்று 1,050 ரூபாவுக்கு உழுந்தை வாங்கி விதைத்து விளையும் நேரத்தில் எங்கள் அரசாங்கத்தின் தவறுதலான திட்டமிடல்களால் விலையை மிகக் குறைவாக கொண்டு வருகின்றார்கள்.

விவசாயிகள் வஞ்சிக்கப்படுகின்றார்களா? அல்லது எங்களுடைய விவசாயிகள் நஷ்டப்பட வேண்டும் என்ற நோக்கோடு அரசாங்கம் ஓடிக்கொண்டிருக்கின்றதோ தெரியவில்லை.

எங்களது கிராமத்தில் ஒரு கிலோ கத்தரிக்காய் 50 ரூபாவிற்கு கொள்முதல் செய்து 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வவுனியா நகரில் 150 ரூபாவிற்கு விற்கின்றார்கள். அது தம்புள்ளைக்கு போனால் 300 ரூபாவாகவும், கொழும்பிற்கு போனால் 450 ரூபாவாகவும் மாறுகின்றது.

இடைதரகர்களால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் சாதாரண மக்களும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே எங்களுடைய அரசாங்கம் சில கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். தை மாதம் 15 ஆம் திகதி அறுவடையின் பின்னர் நெல் சந்தைப்படுத்தும் சபை நெல்லை நல்ல விலைக்கு கொள் முதல் செய்யத் தயாராக வேண்டும். அதே போல உளுந்து நன்றாக விளைந்து வருகின்றது. அதனையும் கொள்முதல் செய்ய தயாராக வேண்டும்.

அடுத்து மருந்துகள், இரசாயனங்கள் அதிக விலை கொடுத்து வாங்கி பயன்படுத்தினால் அது பயன் தருவதில்லை. நாங்கள் இரசாயன கம்பனிகளோடு சண்டையிடுவதா?

கால்நடைகள் கடந்த கிழமைக்கு முன்னர் இடம்பெற்ற குளிர் காரணமாக அதிக மாடுகள் இறந்துள்ளன. மாடுகளுக்கு சரியான மேய்ச்சல் தரை இல்லை இதனால் மாடுகளை குறைந்த விலைக்கு விற்க வேண்டி இருக்கின்றது.

எங்கள் மாவட்டத்தில் பாலினை கொள்முதல் செய்வதற்கு காலையில் வரிசையில் நின்று கொள்முதல் செய்யும் போது எங்களது பிரதேச பாலை வேறு கம்பனிகள் வாங்கி செல்கின்றார்கள். சரியான மேய்ச்சல் தரை வேண்டும்.

வன திணைக்களம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எடுத்துரைத்தீர்கள். ஆனால் ஏன் உங்களால் வன திணைக்களத்தைச் சமாளிக்க முடியவில்லை.

ஜனாதிபதியிடம் பகிரங்கமான வேண்டுகோள் ஒன்றினை விடுகின்றேன். எங்களது நாட்டை மேலே கொண்டு வருவதற்காக வன திணைக்களத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

வன திணைக்களத்தினுடைய நிரந்தர காடுகளை நாங்கள் கை வைக்கவில்லை. 70 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உளுந்து பயிர் மேற்கொண்ட இடத்தை மீட்டு தாருங்கள் மூன்று வருடங்களில் தேசத்தை மாற்றி அமைப்பதற்கு வழிவகை செய்வோம் என மேலும் தெரிவித்தார்.

# சிறுநீரக வர்த்தக விவகாரம்; சுகாதார அமைச்சு முடிவுக்கெதிராக தனியார் வைத்தியசாலையால் மனு!

ஏழை எளியவர்களை ஏமாற்றி இடம்பெற்றதாக கூறப்படும் சட்ட விரோத சிறுநீரக வர்த்தகம் தொடர்பிலான அனைத்து குற்றச்சாட்டுக்களையும் மறுக்கும் நிலையில், தமது வைத்தியசாலையில் உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகளை தற்காலிகமாக இடை நிறுத்தி சுகாதார அமைச்சு விடுத்துள்ள தடைக்கு எதிராக கொழும்பு – பொரளை, கொட்டா வீதியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை நீதிமன்றை நாடியுள்ளது.

அதன்படி மேற்படி வைத்தியசாலையின் தலைவர் மற்றும் வைத்தியசாலை சார்பில் மேன் முறையீட்டு நீதிமன்றில் கட்டளை நீதிப் பேராணை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிவாதியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவானது வெள்ளிக்கிழமை மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான சோபித்த ராஜகருணா மற்றும் தமிக கனேபொல ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது மனுதாரருக்காக நீலகண்டன் மற்றும் நீலகண்டன் சட்ட நிறுவனத்தின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி சட்டத்தரணி ஷஹீதா பாரி, புலஸ்தி ரூபசிங்க, ஹபீல் பாரிஸ், ரித்மி பெனரகம உள்ளிட்ட குழுவினர் ஆஜராகினர்.

இதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த மேன் முறையீட்டு நீதிமன்றம், குறித்த தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் இரு சிறுநீரக நோயாளிகளின் நலன்கள் தொடர்பில் உடனடியாக ஆராயுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு உத்தரவிட்டது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், 1985 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கையில் முதன்முறையாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொள்வதில் தாம் முக்கிய பங்காற்றியதாகவும், 1,000 இற்கும் மேற்பட்ட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை நோயாளிகளுக்கு செய்துள்ளதாகவும் மனுதாரரான பேராசிரியர் றிஸ்வி ஷரீப் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் அனைத்து சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளும் தெளிவான, வெளிப்படையான மற்றும் நிறுவப்பட்ட சட்ட நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்படுகின்றன என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுநீரக மோசடி மற்றும் பணம் பறிப்பு உட்பட முழு சம்பவமும் ஒரு திட்டமிட்ட, சூழ்ச்சியான ஊடக நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டது என்று மனுதாரர் அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பைத் தொடர்ந்து, தனது வைத்தியசாலை பல தடவைகள் பல தவறான குற்றச்சாட்டுகளால் குறிவைக்கப்பட்டதாகவும், பின்னர் அவை போலியானவை என நிரூபிக்கப்பட்டதாகவும் மனுதாரர் மனுவில் சுட்டிகாட்டியுள்ளார்.

வைத்தியசாலை எல்லா நேரங்களிலும் சுகாதார அமைச்சால் வகுக்கப்பட்ட அனைத்து வழிகாட்டுதல்களையும் நடைமுறைகளையும் பின்பற்றுவதாகவும், அமைச்சின் அனுமதியின் பேரில் மட்டுமே சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.12.2022இல் வெளியிடப்பெற்றது.